
வாஸ்கோடகாமா



திரு. எஸ் எஸ். தேவர் அவர்கள்
எழுதியது

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி : & சென்னை.

கழக வெளியீடு—௩௦௧.

வாஸ்கோட காமா

திரு. எஸ். எஸ். தேவர் அவர்கள்
எழுதியது

திருநெல்வேலித், தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி] [சென்னை.

Published by:

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., TIRUNELVELI, & MADRAS

Jan 1946

பதிப்புரை

மேல்நாடுகளையும் கீழ்நாடுகளையும் ஒன்றுபட முதன் முதல் இணைத்தது வாணிபத்துறைதான். அவ்வித வாணிப வழி காண முயன்றவர் பலர். அவர்களுள் சிறப்பாகக் கொண்டாடத் தக்கவர் வாஸ்கோட காமா. அவர் தம் நாடாகிய போர்த்துகல்லி லிருந்து புறப்பட்டு நம் நாட்டுக்கு வந்து சேருவதில் அடைந்த இன்னல்கள் பல. "மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார்" என்னும் ஆன்றோர் வாக்கிற்கேற்ப இடுக்கண்களை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல் தமது நோக்கமே இலக்காகக்கொண்டு இந்திய நாட்டிற்கும் ஐரோப்பிய நாட்டிற்கும் வாணிபம் நடக்க வழி தேடியவர் வாஸ்கோ. அவ் வழிகண்ட வரலாறு மாணவ மாணவிகள் படித்தறிய வேண்டுவதொன்றும். அவர்களுக்குப் பயன்படத்தக்க வகையில் இந்நூல் வெளியிடப் பெறுகின்றது. இதனை மாணவர்கள் படித்துப் பல அறிய கருத்துக்களை அறிவார்கள் என்பது திண்ணம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பொருளடக்கம்

வாஸ்கோட காமா

(1) தோற்றுவாய் — இந்திய நாடு

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு"
"பெரும் பொருளாற் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு." —குறள்

உலகின்கண் சிறந்து விளங்கும் நன்னாட்டின் இயல்புகள் பல. அங்கு வாழும் மக்கள் காலந் தவறாது நிலத்தை உழவு செய்வதால் அங்கே நல்ல விளைவு விளையும். அம்மக்கள் நன்னெறியில் நடப்பார்கள்; கேடில்லாத செல்வத்தை யுடையவர்களா யிருப்பார்கள். பிறநாட்டினர் பல பொருள்களுக்காக அந்நாட்டினை நாடி வருவார்கள். நோய், நீரின்மை முதலிய கேடுகள் அங்கு ஏற்படமாட்டா. அரசர்க்குரிய இறைப் பணத்தைக் குடிமக்கள் மனமுவந்து கொடுப்பார்கள். வறுமையும் ஏழ்மையுமுடைய பிறநாட்டார்க்கு அந்நன்னாடு ஒரு புகலிடமுமாகும். பசியும், பகையும் நன்னாட்டில் தலைகாட்டா. நல்ல நாட்டில் அமைதி நிலவி யிருக்கும்; புரட்சியாளர்களும், உட்பகைவரும், அரசர்க் கடங்காத சிற்றரசர்களும் இருக்கமாட்டார்கள். ஏரி, குளம், கிணறு, ஊற்று முதலான நீர்நிலைகளும், ஆறு, ஓடை, அருவி முதலிய நீரோடைகளும் அங்கு நிறைந்திருக்கும். நன்னாட்டு மக்கள், தங்கள்

நாட்டிலேயே தங்களுக்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் நிறையக் கிடைப்பதால் அவற்றிற்காகப் பிறநாடுகளை நோக்கி ஏங்கி நிற்கமாட்டார்கள்.

இத்துணைச் சிறப்புக்களும் ஒருங்கே பெற்றது நம் இந்தியா. இதன்கண் வேளாண்மை சிறந்து நடக்க நெல், கோதுமை முதலான கூலப் பொருள்கள் நன்கு விளைவதனல் மக்கள் பசிப்பிணி யறியாது வாழ்வார்கள். தவிர, கனிப்பொருள்களான பொன்னும் மணியும், காடுபடு பொருள்களாகிய தேன் தந்தம், மயிலிறகு முதலியனவும், மலைபடு பொருள்களான மூலிகைகள், நறுமணப் பொருள்கள் ஆகியவையும் கடல்படு பொருள்களான முத்து, பவளம் சங்கம் முதலியனவும் நிறைந்திருக்கும். நம்நாட்டில் கிடைக்காத பொருள் எதுவும் இல்லை. நமக்கு வேண்டிய பொருள்களை நாம் வேண்டியாங்கு அளிப்பது நம் நாடு. நாம் உடை, உணவு, உடல்நலம் முதலியவற்றிற்கு வேண்டிய பொருள்களுக்காகப் பிறநாட்டினரை நாடி நிற்க வேண்டுவதில்லை. உலகத்தினர் நம் நாட்டைப் பொன் விளையும் நன்னடென்று போற்றுவார்கள். பிறநாட்டினர் தமக்குத் தம் நாட்டிற் கிடைக்காத பொருள்களைப் பெற நம் நாட்டை நாடுதல் தொன்று தொட்டுப் பெருவழக்கமாயிருந்து வருகிறது.

முற்காலத்தில் கடல்கடந்து பயணஞ் செய்து வாணிபம் நடத்துவதில் முதன்மையாக விருந்த [1]**போர்த்துகல்,** [2]**ஸ்பெயின்** என்னும் இரு ஐரோப்பிய நாட்டினர் செல்வமலி இந்தியாவுக்கு வந்து போக

1. Portugal. 2. Spain.

கடல்வழி யொன்றைக் கண்டமைப்பதில் மிகவும் முனைந்திருந்தார்கள். அவ்வழியைப் புதிதாகக் கண்டமைக்கும் நாட்டினர்க்கே அவ்வழியைப் பயன்படுத்தும் முழு உரிமையும் சேரும். ஆதலால் ஐரோப்பாவிலிருந்து நம் நாட்டுக்கு வரக் கடல் வழி தேடுவதில் போர்த்துகல் நாட்டு இளவசரா யிருந்த ஹென்றி என்பவர் மிகுந்த ஊக்கமுடையவரானார். அவர் தாமே ஆப்பிரிக்காவின் மேற்குக் கரைக்குப் போய் அங்கிருந்த மூர்ச்சாதியினர் கொண்டு வரும் அரிய வாணிபப் பொருள்கள் ஆப்ரிக்கப் பெரும் பாலை நிலத்திற்குக் கிழக்கே வெகுதொலையிலிருந்து வருவதாகக் கேள்வியுற்றார். அவை கிடைக்கும் நாடு இந்தியா வென்றும், கடல் வழியாக அங்குச் செல்ல ஆப்ரிக்காவின் தென் பகுதியைச் சுற்றிப் போக வேண்டும் என்றும் அறிந்திருந்தார். ஹென்றிக்குப் பின் போர்த்துகல் நாட்டின் அரசரான **ஜான்** என்பவர், அம்முயற்சியைத் தொடர்ந்து நடத்தினார். அரசகுடும்பத்தைச்சேர்ந்தவராகிய[1] **'பார்த்தலோமியூ' டயாஸ்** என்பவரைக் கீழ்த்திசைக்கு வழிதேடப் பரிவாரக் கப்பல்களுடன் அனுப்பவைத்தார். **டயஸ்** 1486-ஆம்ஆண்டு புறப்பட்டு ஆப்ரிக்காவின் தென் கோடி முனைவரையில் வந்தார். புயலடி தாங்க வொண்ணாத நிலையிலும் அஞ்சா நெஞ்சினராய் அவர் அம் முனையைச் சுற்றிவந்தார். பரிவாரங்கள் மேற்செல்ல மறுத்துக் கலகம் செய்தலால் அவர் அம்முனைக்குப் **புயலடி முனை**[2] என்று பெயரிட்டுப் போர்த்துகல் திரும்பிப்போனார்.

---

1. Barthalomeo. 2. Stoking Cope.

டயஸ் போர்த்துகல்லுக்கு வந்து தம்முடைய கடற்பயண வரலாற்றை ஜான் அரசருக்குத் தெரிவித்தார். அரசர் இந்தியாவுக்குச் செல்லும் வழி அதுதான் என்று சொல்லி, ஆப்ரிக்காவின் தென் கோடிக்கு [1] "**நன்னம்பிக்கை முனை**" யென்னும் நற்பெயரிட்டனர். இந்தியாவுக்குக் கடல்வழி காண வேண்டுமென்னும் பேரவா, ஜான் மனத்திற் குடி கொண்டது. ஆயினும் ஆப்ரிக்காவின் தென்முனை வழியாகக் கப்பல்கள் சென்றால் அவை பேரிடுக்கண் களுக்குள்ளாக வேண்டுமென்று அந்நாட்டினர் அவர் முயற்சிகளைத் தடுத்து வந்தனர். ஆதலால் அரசருடைய எண்ணம் நிறைவேறாமலே இருந்தது. அப் பேரவா கைகூடாமலே ஜான் அரசர் காலமானார்.

அதற்கிடையில் **ஸ்பெயின்** நாட்டார் இந்தியாவுக்குச் செல்லத் தங்கட்கென்று வேறொரு வழி காணும் பெருமுயற்சியில் ஈடுபட்டனர். அதற்காகக் **கொலம்பஸ்**[2] என்பவர் சில கப்பல்களுடனும் பரிவாரங்களுடனும் அனுப்பப்பட்டார். அவர் கடற்பயணத்திற்படாத பாடுகளெல்லாம் பட்டுக் கடைசியாகச் சில தீவுகளைக் கண்டார். அத் தீவுகளின் அருகில் பெரு நிலப்பரப்பு இருக்கவேண்டுமென்று ஊகித்தார். அந்நிலப்பரப்பிலேயே இந்திய நாடும் இருக்கவேண்டும் என்றும் எண்ணினார்; ஆதலால் அத் தீவுகளுக்கு [3]**மேற்கிந்தியத் தீவுகள்** என்றும் ஆங்கு அவர் கண்ட மக்கட்கு இந்தியர்கள் என்றும் பெயர்களிட்டு மகிழ்ந்தார். தம் பரிவாரங்கள் ஊக்கங்

1. Cape of Good Hope. 2. Columbus. 3. West Indies

குன்றியதால் கொலம்பஸூம் தாய்நாடு திரும்ப வேண்டியதாயிற்று. இது கி.பி. 1492ஆம் ஆண்டில் நிகழ்ந்தது.

கொலம்பஸ் கடல் ஓடிக் கண்டுபிடித்தவை எல்லாம் இந்தியா அன்று; தென் அமெரிக்காவின் வட பாகத்தின் கரையோரமாக இருந்த சில தீவுகளே. அஃதே ஆசியா கண்டத்துக் கரை யென்றும் கொலம்பஸ் எண்ணிக்கொண்டு இந்தியாவைத் தாம் கண்டுபிடித்து விட்டதாக எண்ணி ஸ்பெயின் நாடு சேர்ந்தார். உண்மையில் அவர் கண்டு பிடித்தது அமெரிக்கா கண்டமே ஆகையால் "அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர் கொலம்பஸ் கொலம்பஸ்" என்று ஐரோப்பியர் பாராட்டினர்கள். இந்தியாவின் பெயரைச் சொல்லிக்கொண் டிருந்ததனாலேயே ஒரு பெரும் புது நிலப்பரப்பாகிய அமெரிக்கா கண்டம் ஐரோப்பியருக்குக்கிடைத்தது. அஃது அவர்களுக்கு பெறற்கரிய ஒருபெரும் பேறும். அஃது இந்தியர்களாகிய நமக்கும் ஒரு பெருமையே! நல்லார் பெயரைச் சொல்லிக்கொண்டு இருந்தாலே நன்மை யுண்டாகு மென்பதுநன்ருடாகிய நம் இந்தியாவில் வாழ்ந்த பெருமக்கள் வாக்கன்றோ!

(2) போர்த்துக்கேசியர் முயற்சி

கொலம்பஸ் நாடு கண்ட செய்தி போர்த்துகல் நாட்டினர் எல்லோருக்கும் படபடப்பையும், துடி துடிப்பையும் உண்டாக்கிவிட்டது. நாட்டினர் பேராவலுற்று இருந்தது போலவே, போர்த்துகல் அரசரும் நாடு காண்பதில் ஊக்க முடையவ ரானார். அவர் பெயர். [1]**இமானுவல்** விரி கடல்வழியே இந்தியாவுக்குச் செல்லும் கப்பல் வழியொன்று கண்டு புகழ் பெற வேண்டுமென்னும் ஆவல் ஜான் அரசருக்கு இருந்ததுபோலவே இமானுவேல் அரசருக்கும் இருந்தது. இந்தியாவுக்கு வழி காணும் முயற்சியில் போர்த்துகல் நாட்டினரே முந்திவிட வேண்டுமென்பது அவர் பேரவா. அப்பேறு தம் நாட்டுக்கே தனி உரிமையாக வேண்டு மென்பதும் அவர் நாட்டம். தம் நோக்கத்தை நிறைவேற்ற இமானுவேல் இமைப்போதும் தாழ்த்தினாரில்லை. சில நாட்களிலேயே மூன்று கப்பல்கள் கட்டியாயிற்று. உணவுப் பொருள்களையும் மருந்துகளையும் வாணிபப் பொருள்களையும் வேண்டிய அளவு அக்கலங்களில் ஏற்றிக் கொண்டார்கள்.

அக் கடற்பயணத்துக்குத் தக்க நாவிகர் தலைவர் ஒருவரும் கிடைத்தார். [2]"**வாஸ்கோட காமா**" வென்பவர், ஓர் உயர் குடியிற் பிறந்தவர். அவர் நாட்டுக்கு நல்ல வேலை செய்தவர். அரசர் அவரையே இப்பயணத்துக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக்கொண்டார். காமாவின் உடன் பிறந்தவராகிய [3]**பாலோ**

---

1. King Emmanual. 2. Vasco-da-gama. 3. Paulo.

வென்பவரும் பாலோவின் நண்பராகிய [1]கோசலோ என்பவரும் துணைத் தலைவராயினர் "ராபேல்" "கேப்ரியல்" "மிகோல்" என்னும் மூன்று கப்பல் களும்முறையே அம்மூவரிடம் ஒப்புவிக்கப்பட்டன.

1497:-ஆம் ஆண்டு இளவேனிற்காலம் நாயிறு நாள், இளநாயிறு கடலடியிற் றோன்றிற்று. [2]லிஸ்பன் நகரின் தெருக்களிலும், சதுக்கங்களிலும் மக்கள் நிறைந்து இருந்தன. புதுமையொன்று நகரில் நடைபெறப் போவதாகத் தென்பட்டது. அப் பழைய நகரில் புதுவிழா வொன்று நடக்க அதனைக் காண்பதற்கென்று, அழகுடை புனைந்த அந்நகர் மக்கள் கூட்டங் கூட்டமாய் ஒரு பக்கமே நோக்கிப் போவதாகவும் காணப்பட்டது. பெருந்தேவர் கோட்டத்தின் மூலை முடக்குகளிலெல்லாம், பெரு மக்களும் செல்வர்களும் பெருங் கூட்டமாய்க் கூடிவிட்டனர். ஆங்குத் திறையிடுவோரிடத்தில் நாட்டரசரும் அரசியும் சிறப்பான அவைக் குழாத்துடன் தங்கள் தங்கள் இருக்கைகளில் வீற்றிருந்தனர். அவர்களுக்கு அண்மையிலேயே வாஸ்கோ, பாலோ, கொஸலோ ஆகிய முத்தலைவர்களும் அழகிய ஒளிருடையுடன் யாவர் நாட்டமும் தங்களை நாடக் களிப்புடன் இருந்தனர். ஆங்கு அப்போது லிஸ்பன் நகரின் கிறித்துவ நெறித்தலைவருடைய ஒரு குரலே கேட்டது. அவர் இறைவனைப் போற்றிக் கூட்டத்தை நோக்கி, "வாஸ்கோவின் கடற்பயணம் வெற்றி பெறுவதாக' என்று கடவுளை வேண்டிக் கொள்ளுங்கள்" என்று கூறினர்.

---

1. Kosolo. 2. Lisbon.

கடவுள் வாழ்த்து முடிந்ததும் தேவர் கோட்டத்திலிருந்து எல்லோரும் புறப்பட்டு வழியில் மட்டற்ற மக்களின் களிப்பூட்டும் கைத்தட்டலுடன் இறைவன் அரண்மனை யடைந்தனர். கப்பல் ஏறும் நேரம் வர எல்லோரும் சேர்ந்து ஊர்வலமாய்த் துறைமுகஞ் செல்லத் தொடங்கினர். ஊர்வலத்தில் முன்னணியில் அராபிக் குதிரையின்மேல் வாஸ்கோவும் இரு பக்கங்களிலும் துணைத் தலைவர்கள் இருவரும் பெருமையுடன் சென்றனர். அவர்களுக்குப் பின்னல், ஒளியும், அழகும் நிறைந்த உடுப்புக்கள் அணிந்த கப்பற் பரிவாரங்கள் இருவர் இருவராய்ச் சென்றனர். நகர்ப் பெருமக்களிற் பெரும்பாலோரும் அரசருடைய அலுவலாளர்களும், உடன் சென்றனர். அவர்களுடன் நகரமக்களும், திரள் திரளாக வந்து சேர்ந்துகொண்டனர். அக்கூட்டத்தில் நாவிகர்களின் உறவினரும் நண்பர்களுமான பலர் 'அவர்களுக்கு நடுக்கடலில் நேரக்கூடிய இடுக்கண்களை நினைத்து ஓரளவு கவலையடைந்தார்கள். ஏனையோர் வாழ்த்துக் கைதிகொட்டினார்கள். கப்பற் றுறையில் மூன்று கப்பல்களிலும் பல நிறக் கொடிகள் அழகுடன் நிறையக் கட்டப்பட்டிருந்தன. காமா கடற்கரை யடைந்ததும் நாவாய்த் தலைவரை வரவேற்பதற்கறி குறியாகப் பல குண்டுகள் வெடித்தன. துறைப் பக்கங்களில் வீட்டுக் கூரைகளின்மீதும், மேற்றளங்களிலும் மக்கள் கூட்டங் கூட்டமாக ஆரவாரஞ் செய்து கொண்டிருந்தனர். வாஸ்கோ சரேலென்று குதிரை விட்டிறங்கி வீர நடையோடு கரைக்கும், கப்பலுக்கும் இடையிலிருந்த பலகையைக் கடந்து தமக்குரிய ரபேல் கப்பலில் தன் பரிவாரத்

துடன் ஏறினர். அக் கப்பலில் வாஸ்கோ மகிழ் முகத்துடன் நாட்டின் தோற்றத்தையும் மக்களின் முகத்தையும் விருப்புடன் நோக்கினர். அடுத்து பாலோவும் கொசலோவும் அவ்வாறே தத்தம் கப்பல்களில் இருந்தார்கள்.

குறித்த நேரத்தில் வாஸ்கோ கப்பல்கள் புறப்படலாமெனக் கட்டளையிட்டார். கப்பற்றுறையில் மக்கள் சித்திரப் பாவைபோல் அசைவற்றுப் பார்த்த கண் பார்த்தபடியே நின்றனர். திடீரெனப் பாய்கள் அவிழ்ந்து விரிந்தன ; நங்கூரங்கள் மேலெழுந்தன ; துறைமேடையில் குண்டுகள் வெடித்தன; மக்கள் உரத்த குரலுடன் வாயார வாழ்த்திக் கைவீசி நல் விடை கொடுத்தனர். உரமும் மாட்சிமையும் நிறைந்த அக் கப்பல்கள் **லிஸ்பன்** துறைவிட்டு மெதுவாக நகரத் தொடங்கின. கப்பல்கள் புறப்பட்ட முதல் நாளன்று எதிர்காற்றடித்தபடியால் லிஸ்பனுக்கு மேற்கே சிறிது தொலைவிலிருந்த [1]**பேலம்** துறைமுகம் வரைசென்று இரண்டு நாள் அங்கேயே தங்கிவிட்டன. மூன்றும் நாள் அவர்களுக்கு நலமாகக் காற்று வீசவே கப்பல்கள் புறப்பட்டன. இமானுவேலரசர் கப்பல்கள் நடுக்கடல் போகும் வரை அவற்றுடன் சென்று நாவிகர்களுக்கு நற்செலவு கொடுத்து வாழ்த்திக் கப்பல்கள் கண்களுக்கு மறையும் வரைப் பார்த்துத் திரும்பினர்.

---

1. Belem.

(3) இன்னலும் இன்பமும்

காற்றுங் கடலுங் கருத்த வானமும் வெப்ப தட்ப நிலையும் வாஸ்கோ. முதலிய துணிசெயலாளர்க்குத் துணை செய்யக் கப்பல்கள் கடுகச் சென்றன. வாஸ்கோவின் மனத்தில் ஊக்கம் மிகவும் பெருகியது. கப்பற்காரரும் களிமகிழ் வெய்தி நாவாய் வேலைகளை நலமுற நடத்தினர். மூன்று கப்பல்களும் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டு மிக அருகிற் சென்றன. நாவிகர்களும் தங்கள் தங்கள் கப்பல் களிலிருந்தபடி ஒருவரோடொருவர் உரையாடிக் கொண்டு போனர்கள். ஏழெட்டு நாட்களில் அவர்கள் ஆப்ரிக்கப் பெரும் பாலைக் கருகில் உள்ள கனேரித் தீவுகளைக் கண்டார்கள். அதுவரை அவர்களுடைய பயணம் நற்பயணமே. சென்ற வழியும் நேர் வழியே. அவர்கள் [1]**கனேரித் தீவு**களைக் கடந்தவுடனே பெரும் புயற்காற்று வீசியது. கப்பல்கள் அலைகளின் நடுவே அலையலாயின. புயல் அடங்கிய போதும் காமாவின் கப்பலை எவ்விடத்திலும் காணவில்லை. தலைவருடைய கப்பல் தண்ணீரில் மூழ்கி விட்டதாக எண்ணி உடன் பிறந்தாரும் மற்றையோரும் பெருந் திகிலடைந்தனர். ஆயினும் அவர்கள் இடுக்கணுக்கு அஞ்சவில்லை. தம் தலைவர் முன்னரே தங்களுக்குப் பணித்திருந்தபடி ஆப்ரிக்கா கண்டத்தில் **செனிகல்**[2] நாட்டைச் சேர்ந்த [3]**வெர்டி முனைத் தீவு**களை நோக்கிச் சென்றனர். பின்னும் ஏழு நாட்களுக்கெல்லாம் காமா சென்ற கப்பல் தவிர மற்

---

1. Canary Islands. 2. The Senegal.

றிருகப்பல்களும் அத் தீவுகளை அடைந்தன. அத் தீவுகளை அணுகியதும் தொலையில் அவர்கள் ராபேல் கப்பலையும் வாஸ்கோவையும் அதில் கண்டார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் வாஸ்கோ கப்பல் அருகில் வர எல்லோரும் ஒன்று கூடிவிட்டனர். எக்காளங்கள் கொட்டின; வெடிகுண்டுகள் வெடித்தன. வெர்டீத் தீவுகளில் ஒன்ருகிய சான் ஜாகோவுக்குப் புறப்பட்டு வந்து அங்கே ஒரு கிழமை தங்கினுர்கள். அங்கே நல்ல தண்ணீர்நிரப்பிக்கொண்டனர். உணவுப்படகிலிருந்து அவரவர்கள் வேண்டியவைகளை எடுத்து வைத்துக் கொண்டனர். கப்பற் கயிறுகளையும் தூண் முதலியவைகளையும் பழுது பார்த்துகொண்டனர். அப்போது அவர்கள் போர்த்துக்கல் நாடு விட்டுத் திங்கள் ஒன்ருயிற்று. மே மதியில் அவர்கள் அத் தீவை விட்டுப் புறப்பட்டார்கள். அங்கிருந்து **நன்னம்பிக்கை முனையை** இலக்காகக் கொண்டு கப்பல்கள் சென்றன. வாஸ்கோ மனவூக்கமும் எழுச்சியுங் கொண்டவரல்லவோ! அவர் கரையோரமாகவே சென்ருல் மன நிறைவோடு இடுக்கணின்றிப் போகலாமல்லவா? ஆயினும் அவர் அவ்வாறு செய்யவில்லை. ஏனெனில் இந்தியாவை எப்போது காண்பதென்னும் பேரவாவே அவரைப் பிடர்பிடித் துந்தியது. ஆகையால் அவர் கினியா கரையிலிருந்து குறுக்காகவே நன்னம்பிக்கை முனை நோக்கிச் சென்ருர். சான் ஜாகோதீவை விட்டு அவர்கள் மறுபடி கரையைக் கண்ணுல் பார்ப்பதற்குத் திங்கள் பல சென்றன. அக் காலத்திற் சில வேளைகளில் கப்பலாட்கள்

பொறுமையற்றுத் தாய்நாட்டை எண்ணி ஏங்கிப் போனதுண்டு. அவ்வப்போதும் மூடுபனி முதலியவற்றைக்கண்டு கரையடைந்து விட்டதாக எண்ணி ஏமாந்துபோனதுமுண்டு. சிற்சில வேளைகளில் தலைவர் வாஸ்கோவே தம்திசையறி கருவியைப் பார்த்து வழிதப்பிப் போய்விட்டோமோவென்று மனம் நடுங்கியதுமுண்டு. இன்னும் சில நாட்களில் கடும் புயலால் கப்பல்கள் கவிழ்ந்துவிடுவதுபோற் காணப்பட்டதுமுண்டு. இத்திற இடுக்கண்களிடையிலும் காமா பல கிழமைகளாகியும், பல திங்கள்களாகியும் மனத் திடம் சிறிதும் தளராராய்த் தாம் நோக்கிய வழியை விட்டகலாமலேயே கப்பல்களை நடத்திக் கொண்டு போனர். இடுக்கண்களை இடுக்கட் படுத்தும் தன்மையுடையவர் அன்றோ வாஸ்கோ! கப்பலாட்கள் வழியில் பல தடவைகளில் அச்சமடைந்து தாய்நாடு திரும்பிவிட வேண்டுமென்று சொல்லிய போதெல்லாம் வாஸ்கோ "நாம் முன்வைத்த காலைப் பின் வைக்கலாகாது. இந்திய நாட்டைக் கண்டே திரும்ப வேண்டும் அல்லது கடலிற் கவிழ்ந்து விட வேண்டும்" என்னும் சொற்களையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு வந்தார். அவ்வாறு கடல் கடந்து காமா ஆகஸ்டு திங்கள் இறுதியில் ஆப்ரிக்காவின் தென் கரையருகே வந்துவிட்டார்கள். அந் நாட்களெல்லாம் எப்படிக் கழிந்தனவோ அவருக்குத் தெரியாது. வெப்பங் கொண்ட காற்றுந் தட்பங் கொண்டதாக மாறியது.

ஒரு நாட் காலை அவர்கள் தரையைக் கண்டார்கள். அதுவரையில் சேர்ந்தே வந்துகொண்டிருந்த

கப்பல்கள் வெவ்வேறு வழியாகப் பிரிந்து போயின. கப்பற்றலைவர் ஒவ்வொருவரும் தாம், தாம் முதலில் தரைகாணவேண்டுமென்று கரைநோக்கிச் சென்றார். அவர்கள் சிறிது தொலை கரையருகே சென்று ஒரு விரிகுடாவைக் கண்டு அங்கே கப்பல்களை நிறுத்தினர்கள். அவர்கள் அதற்கு **செயிண்ட்டு ஹலீனு**[1] குடாவென்று பெயரும் இட்டனர். நன்னம்பிக்கை முனையினின்றும் தாங்கள் மிகுந்த தொலையிலில்லையென்று காமா முழு நம்பிக்கையோடு இருந்தார். அவர் ஆங்குள்ள மக்களிடம் அம்முனையைப் பற்றிச் சில குறிப்புக்களைக் கேட்டறிய முயன்றும் பயன் பெறவில்லை.

---

(4) முனை நெருங்குதல்

செப்டம்பர் முதல்நாள் கப்பல்கள் மறுபடியும் புறப்பட்டன. வாய்ப்பான காற்றுவீச வாஸ்கோ தம் நண்பர்களை நோக்கி "முனை மிகு தொலையி வில்லை; அஃது என் மனத்தில் நன்றாய்ப்படுகிறது," என்று சொல்லவும் நாவாய்கள் நலத்துடனே நிலஞ் சுற்றியோடின. அலைகடற் போக்கில் அமைதி யுண்டோ! அவர்கள் ஹெலீனுவை நீங்கியதும் எதிர்காற்றும் புயலும் கப்பல்களைத் தாக்கின. அலைகள் மிக உயரமாக அடித்துச் சிறு கப்பல்களைத் தள்ளாடச் செய்தன. பெரு நீரலைகள் அவைகளைப் பெருங் கடலடிக்

1. St. Helena Bay.

குக் கொண்டுபோய் வீழ்த்திவிடுமோ வென்று நடு நடுங்கினர். புயல் முழக்கத்தில் நாவாய் ஓட்டிகள் பெருங் கூச்சலும் காதுகளுக்கெட்டவில்லை. சிறிது நேரம் வெளிச்சமாயிருக்கும் உடனே பேரிருள் மூடிக்கொண்டு கப்பல்கள் செல்லுந் திசை தெரியா மற் போகும். காற்றும் அலைகளும் அடிக்கும் திசைக்கே அவை சென்றன. அத்தகைய இடுக்க ணில் வாஸ்கோவின் மன உறுதியும் தாளாண் மையும் நன்கு சோதனைக் குள்ளாயின.

புயல் சற்று ஓய்ந்ததும் களைத்து ஏக்கமடைந்த கப்பலாட்கள் வாஸ்கோவைச் சுற்றி நின்று, "தலை வரே இந்த வேலை வேண்டாம், இல்லம் போய்ச் சேர்வோம். இங்கு எக்காலமும் புயலே! இதுவரை எந்தக் கப்பல் இம்முனை தாண்டிப் போயிற்று? திரும்பினலொழிய, திரைக்கு இரையாக வேண்டி யதுதான். நாம் இதுவரை அடிக்கடி கண்டு கொண்டே வரும் கரைக்கு எல்லையே யில்லை. இஃது இந்நில உருண்டையின் தென் கடற்கப்பாலும் போகும் போலும்" என்று வருந்தி இரைந்து வணங் கிச் சொல்லிக்கொண்டனர். இதற்கெல்வாம் அஞ்சு பவர் வாஸ்கோட காமாவா! அவர் அவர்களைப் பார்த்து, "நன்மக்களே! நமக்குமுன் சிறிது தொலை யிலேயே முனை இருக்கின்றது. நீங்கள் நம்புங் கள்; மனவலி இழக்காதீர்கள்; ஏக்கமடையாதீர்கள். பயணத்தை நிறுத்தாமல் போய்க்கொண்டே யிருந் தால் முனை சுற்றி அப்பாற் சென்றுவிடலாம்" என்று அவர்களைப் போற்றித் தணிப்பாய்ப் பேசினர்.

இஃதேயன்றி **வாஸ்கோ** அதுமுதல் அவர்கள் மனநிறைவடையும் பொருட்டு அவர்களுடைய செய் பணிகளில் தாமும் ஈடுபட்டார். நாள்தோறும் தலைமையாட் குழலூதியதும் பணியாட்களைப் போலத் தாமும் மேற்றட்டுக்கு வந்துவிடுவார். உறக்கம் என்பதை மறந்து அவர் இரவும் பகலும் சுக்கான் அருகில் நிற்பார். ஏவலர் உண்ணும் உணவையே தாமும் உட்கொள்வார். கப்பலோட்டிகளைப் படைந்து போனால் அவன் வேலையைத் தாமே செய்வார்.

இவ்வாறு செய்தும் ஆட்கள் அவ்வப்போது திரும்பிப் போகும் பாடத்தைப் படித்துக் கொண்டே வந்தனர். இறுதியாக வாஸ்கோவுக்கு என்றுமில்லாத சினம் மூண்டது. உடனே அவர் எல்லோரையும் மேற்றளத்திற் சேர்த்து அவர்கட்கு முன்னின்று "முனை சுற்றி வருமளவும் தினையளவும் மனம் மாறேன்'' என்று உறுதியாய்க் கூறிவிட்டார்.

மூன்று கப்பல்களும் முனைநோக்கிச் சென்றன. அடிக்கடி கரை கீழ்ப்பக்கமே தெரிந்துகொண்டு வந்தது. கப்பல்கள் முனை தாண்டி வந்துவிட்டதாகத் தோன்றவேயில்லை. முனை தாண்டும்வரையில் இடுக்கணுக் கஞ்சாது நெடுகச் சென்றுகொண்டேயிருக்கவேண்டுமென்று முடிவு செய்துகொண்டார் திண்ணியராகிய வாஸ்கோட காமா. அவ்வாறு செல்லுங்கால் ஒருநாட்காலை கப்பலோட்டிகள் அலையற்று ஒலியற்று அடங்கி யிருந்த தண் கடற்றுறையை அடைந்தனர்; மெல்லிய காற்றும் முன்னேக்கி யடித்தது. முன்னுட்கள் போலன்றி அற்றை

நாள் துன்பற்று இன்புற்ற நாளாயிற்று. கப்பல்கள் உடனே கரையைக் காணவில்லையாயினும் வாஸ்கோட காமா முனை சுற்றி வந்துவிட்டதாகத் தெரிந்துகொண்டார். உடனே அவர் மற்றிரண்டு கப்பல்களுக்கும் குறிகாட்ட அக்கப்பல்களும் அங்கே வந்துவிட்டன. அந்த நற்செய்தி கப்பலுக்குக் கப்பல் பரவியது. மாலுமிகளின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. மற்றவர்கள் பாய்மர மேறிக் களிப்புடன் தொப்பிகளை ஆட்டிக் காட்டுவோர்களும், எக்காளம் கொட்டுவோர்களும் ஒருவரை யொருவர் கட்டிக்கொண்டு கூத்தாடுவோர்களுமாயினர்.

அதுவரையில் அவர்கள் அடைந்த தொல்லைகளையும், இன்னல்களையும் ஒரு கணத்தில் அவர்கள் மறந்தே போயினர். காமாவோ வெற்றி மகிழ்ச்சியால் மலர்ந்த முகத்தோடு உடனுளர்கள் நடுவில் உலாவினர். அவர்கள் அவர் உடைக்கு முத்தமிட்டனர். அவரிடம் தாங்கள் முன்பு திரும்பவேண்டுமென்று சொன்னதற்கு, குற்ற மன்னிப்பும் கேட்டுக்கொண்டனர். அவரை ஓயாது வாழ்த்தினர். நெறியிறைவர்கள் தங்கள் தங்கள் நெறியுடையணிந்து கப்பல்களின் மேற்றட்டுகளி லேறினர். எல்லோரும் முழங்காற்படியிட்டனர்; தொப்பிகளைக் கழற்றிப் பிடித்துக்கொண்டனர்; தலை குனிந்தனர். அவ்வேளையில் "கர்த்தாவே! எங்கள் உள்ளங்களெல்லாம் தங்களுக்கு இந்நேரத்திற் காட்டவேண்டிய நன்றியறிவினால் நிறைந்து மேலிட்டுப் பெருகுகின்றன" என்னும் குரலோசைகள் எல்லாக் கப்பல்களிலும் கேட்டது.

கப்பல்கள் முனையைச் சுற்றி வந்துவிட்டதாக எல்லோரும் மகிழ்ந்தனர். கரையோரமாகவே அவைபோய்க்கொண்டிருந்தன. அக்கப்பல்கள் நிற்பதற்கு ஏற்ற இடம் காணப்படவில்லை. ஆதலால், அவை மீண்டும் நடுக்கடலுக்கே போய்விட்டன. பகல் நேரத்திற் பாய்களைப் பரக்க விரித்துக் கொண்டு காற்றோட்டத்தின்படி கடுகியே சென்றன. இரவிலோ எச்சரிக்கையாகவே எல்லாக் கப்பல்களையும், மாலுமிகள் மெல்லச் செலுத்தினர். முனை சுற்றிக் கரைக்குத் தொலையில் கப்பல்கள் ஓடிய போதிலும் புயற்காற்று எல்லையை அவர்கள் முற்றும் கடந்து போய்விடவில்லை.

மாரிகாலம் வந்தது. அப்போதும் இந்தியாவின் இருப்பிடம் அவர்களுக்குத் தெரியவில்லை. ஒரு நாட் காலை திடீரென்று ஒரு பெருங் கொடும் புயற்காற்று கப்பல்களைத் தாக்கியது. வாஸ்கோ மேற்றட்டி லிருந்து தன் கூரிய கண்களால் கோள்களையுற்று நோக்கியவாறு கப்பலோட்டிகளுக்கு வேலையிட்டுக் கொண்டிருந்தார். கப்பலாட்கள் கருத்தோடும் களிப் போடும் தத்தம் வேலையைச் செய்தார்கள். புயலோ வர வர ஓங்கியது. முடிவில் கப்பலோட்டி தொப்பியைக் கழற்றிக் கையிலேந்தித் தலைவரிடம் தயங்கித் தயங்கி வந்து நின்று "மாலுமியாரே, நமது கப்பல்கள் ஆற்ற லற்றனவாய் இருக்கின்றன. நாம் தரை நோக்கிக் கடுகச் சென்று தங்கியிருந்து, புயல் ஓய்ந்ததும் புறப்படலாமே" என்றான். அப்போது வாஸ்கோ "முடியாது, உனக்கேற்பட்ட வேலையைப் போய்ச்செய். ஓரடிகூடப் பின்னுக்கு வைப்பதில்லை

யென்று கருத்தி லுறுதி செய்துகொண்டுதான் **லிஸ்பன்** துறைமுகம் விட்டுப் புறப்பட்டேன் யான்'' என்று உறுத்து, உரத்துக் கூறினர். கப்ப லாட்கள் காமா முகங் கண்டு திகைத்துப் போயினர். அவருடைய முகம் கண்டிப்புத் தன்மையைக் கடுமையாய்க் காட்டியது. அவர் விட்டுக் கொடுப்பார் என்று தோன்றவில்லை.

புயலோ நேரம் ஆக ஆக மேலோங்கி நாற்புறமும் வீசி யடிக்கத் தொடங்கியது. அலைகளும் மேன்மே லோங்கி அலைக்கழித்தன. கப்பல்களில் கடல்நீர் புகாத இடமேயில்லை. எங்கும் வெள்ளக் காடாயிற்று. பிறகு, காற்று நின்றது. கப்பல்களோ கடலலையில் தள்ளாடின. இருமருங்கும் நீரேறத் தொடங்கியது. ஆட்க ளெல்லாரும் பாய்மரங்களையும் கயிறுகளையும் பிடியாகப் பற்றினர். குழாய்களினின்றும் நீரை வெளியேற்றவும் முடியவில்லை. கப்பல்கள் கிரீச் கிரீச்சென்று மிக்கொலி செய்ய, அவை உடைந்து விடுமோ வென்னும் கவலை மேலிட்டது. ஆட்கள் வருந்தி மிகப் பரிவு காட்டி வாஸ்கோவை நெருங்கித், ''தலைவரே திரும்பிவிடுவோம்; மன்னிக்க வேண்டும்; கப்பல்களுடன் எங்களைக் கடலடி சேர விடாதீர்கள்'' என்று கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டனர். அப்போது வாஸ்கோ, ''முடியாதென்று முன்னமே சொல்லிவிட்டேன். ஒரு நூறு பேர் மரிப்பதை நேரே கண்டாலும் நான் முன்னேக்கிச் செல்ல வேண்டும். **இந்தியா**வுக்கே முந்திப்போகவேண்டும்; இன்றேல், இக் கடலடியிற் றலைசாய்க்க வேண்டும்'' என்று கொடுமுகங் காட்டிக் கூறிப் பிறகு, இன்

முகத்துடன் இயம்புவார்: "நாம் நம் தாய்நாடு சென்று அரசரைக் கண்டு நமது வீரதீரச் செயல் களையெல்லாம் விவரிப்போமாயின் அவர் எவ்வளவு நம்மைப் பெருமை படுத்திப் பரிசுகளளிப்பார் என்பதை இப்போது எண்ணிப் பாருங்கள்; என் மக்களே வாருங்கள்; மனவூக்கம் கொள்ளுங்கள்; ஆண்டவனிடம் உங்களை ஒப்படைத்துக்கொள் ளுங்கள்."

பின்னர், புயல் சிறிது நின்றது. மூன்று கப்பல் களும் மறுபடியும் ஒன்றையொன்று நெருங்கின. ரபேல் கப்பல் ஆட்கள் ஏனையோரைக் கூவி "மாலுமி களின் கட்டளைகளுக்குக் காது கொடாதீர்கள்; நாம் திரும்பிப் போய்விட வேண்டும்" என்றனர். அப் போது வாஸ்கோ மற்ற இரு மாலுமிகளைக் கூவி யழைத்து. "நாம் கரையோரம் திரும்பிவிடல் கூடாது, மனவூக்கத்துடன், நேரே செல்லுங்கள்" என்று கண்டிப்பான கட்டளையிட்டார்.

தலைவர்களைக் கொலை செய்துவிட வேண்டு மென்று ஒரு கலகக் கூட்டம் **ரபேல்** கப்பலில் முன் னமே சூழ்ச்சி செய்திருந்தது. அதை எப்படியோ யறிந்து கொண்டார் வாஸ்கோ. உடனே கலகத் தலைவர்களை யெல்லாம் கண்டுபிடித்து விலங்கிட்டுக் கைதிகளாக்கிக் கப்பலின் மூலைகளில் கடுங்காவலில் வைத்துவிட்டார். அவர்கள் போர்த்துகல் நாடு போகும்வரையில் அப்படியே காவலில் இருக்க வேண்டுமென்றும் கட்டளையிட்டுவிட்டார். "எங்களை விட்டுவிடுங்கள். எங்கள் வேலைகளைத் தவறாமல் செய்துகொண்டுவருகின்றோம்; தங்கள் கட்டளைக்கு

நாங்கள் மீறி நடப்பதில்லை'' என்று அக் கைதிகள் எவ்வளவோ விண்ணப்பித்துக்கொண்டும் காமா அவர்கள் சொன்னவற்றைக் காது கொடுத்துக் கேட்டாரில்லை. அன்று முதல் ஏனைய ஆட்களெல்லாரும் காமாவிடம் அச்சம் கொண்டவர்களாய்த் தத்தம் வேலைகளைத் தயங்காமற் செய்துவர, மூன்று கப்பல்களும் முரண்பாடொன்று மின்றி முன் நோக்கிச் சென்றுகொண்டிருந்தன.

நெடுநாட் புயலடியால் கப்பல்களில் உடைப்புக்கள் உண்டாகிவிட்டன. நீர் இறை குழாய்கள் உள்ளேறும் நீரை வெளியேற்றத் தகுதியற்றுப் போயின. குடிநீரும் குறைந்துவிட்டது. மனவூக்கத்துடன் முன்னறிவும் கொண்ட காமா இக்குறைகளை நீக்கக் கருதிக் கப்பல்களைக் கரையோரம் திருப்பிக்கொண்டார். கரை கண்டு கப்பலாட்கள் களிப் பெய்தினர். கிறித்து பிறந்த நாளன்று ஒரு முனையைக் கண்டு அதற்கு **நெட்டாளம்** என்று பேரிட்டார் வாஸ்கோ. பத்து நாட்களுக்குப் பிறகு ஒரு பெரு ஆற்று முடிவை வாஸ்கோ கண்டார். அவ்விடம் கப்பல் தங்கத் தகுதியுள்ளதென அறிந்தார். அங்கேயே கப்பல்களை நிறுத்தவும் நன்மனங் கொண்டார். அவ்விடத்தைக் காண்பித்துக் கொடுத்த கடவுளுக்கு நன்றி காட்டி, அந்நதிக்கு **இரக்க ஆறு** (River of mercy) என்று பேரிட்டார்.

---

(5) சிறுபகையும், பெரு நட்பும்

இரக்க ஆற்று முனையின்கண் காமா பல நாட்கள் தங்கியிருந்தார். கப்பல்கள் நன்கு பரிசோதிக்கப்பட்டன. சான்மிகூவல் கப்பல் பழுது பார்க்கப்பட்டாலும் ஒன்றுக்கும் உதவாதென்று கண்டு அதனை உடைத்துவிட்டார்கள். அக் கப்பற்காரர்களையும், பண்டாரப் பொருள்களையும் மற்றிரண்டு கப்பல்களிலும் பங்கிட்டு வைத்துக் கொண்டார்கள். அவர்கள் அங்கிருந்து புறப்பட்டதும், கரை யருகிலேயே ஒரு படகு வரக் கண்டனர். அப்படகில் காமா ஒரு மூரனைக் (Moor) கண்டார்; அவன் பெயர் **திவானி**. அவன் காமாவுடன் கடற் பயணம் செல்வதாக ஒத்துக்கொண்டு அவருக்குக் கருத்தொத்த காவலாள னானன்; மார்ச்சுத்திங்கள் முடிவில், கப்பல்கள் [2] **மொஸாம்பிக்** கால்வாயை அடைந்தன. அப்பெயர் கொண்ட தீவை யடைந்து வாஸ்கோ அதன் துறைமுகத்தில் கப்பல்களை நிறுத்தினர். அத்தீவின் மக்கள் நட்புக் கொண்டவர்களைப்போல் நடித்துப் பகைக்கத் தொடங்கவே வாஸ்கோ விரைவில் அவ்விடம் விட்டுப் புறப்பட்டார். ஏப்ரல் திங்கள் முடிவில் கப்பல்கள் **மொம்பாசாத்** தீவினை யடைந்தன. அத்தீவாரும் காமாவிடம் நயவஞ்சனையா யிருக்கவே இரண்டு கப்பல்களையும், கடுகச் செலுத்திக்கொண்டு போனர். அவர் கரையோரமாகச் சென்று மெலிண்டா நகர் சேர்ந்தார். அந்நகர மக்களும் அரசரும் நட்புடன் இவர்களை வரவேற்றது மன்றி இந்தியநாடு செல்வதற்கு ஏற்ற ஆயத்தங்களையும் செய்து கொடுத்தனர். ஒருநாட் காலை **வாஸ்கோவும்,**

பாலோவும் தங்கள் படகொன்றில் ஏறி **மெலிண்டா** அரசரைக் காணச் சென்றனர்.

அந்நகர மக்கள் புனைவுகள் பூண்டு துறைப்பக்கம், கடல் மோதும் கற்பாறைகளின் மேல் ஏறிச் செறிந்து நின்றுகொண்டனர். நகர்ச் சுவர்களின் மீதும், கப்பல் தோணிகளின் மீதும் கட்டிய கொடிகள் காற்றலைபட்டுப் பறந்தன. அப்போது இளவேனிற்கால மாதலால் சுற்றிலுமிருந்த நாட்டுப் பகுதி பச்சைப் பசேரென்று வளம்பெற் றிருந்தது.

கப்பல்களி லிருந்து வந்த இரண்டு படகுகளும் அழகு மிக்க தோற்ற மளித்தன. வாஸ்கோவும், பாலோவும் சிவப்புப் பட்டுடையும் இறகேறிய தொப்பிகளும் வாட்கச்சையும் பூண்டு மகமற் பட்டு மூடிய நாற்காலிகளில் வீற்றிருந்தனர். அவர்கள் பாதங்களின் கீழ் இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. படகின் பக்கங்களில் கம்பளங்கள் போடப்பட்டிருந்தன. அவற்றின்மேல், இவ்விரு நாவிகர்களின் கூட்டத்தார்களும் உட்கார்ந்து கொண் டிருந்தனர். ஒவ்வொரு படகிலும் இரண்டு பீரங்கிகள் வெளியே நீட்டி வைக்கப்பட்டிருந்தன. படகுகளில் போர்த்துகல் நாட்டுக் கொடிகள் பறந்துகொண்டிருந்தன.

படகுகள் விரைவிலேயே துறைமேடையைக் கிட்டின. 'அங்கு நரைதிரை கண்ட முகத்துடனும் தம் குழாத்துடனும் அரசர் இவர்களை வரவேற்க நின்றுகொண்டிருந்தார். வாஸ்கோவும், பாலோவும், படகில் இருக்கைவிட் டெழுந்து வணங்கினர். மூரர்களும் அராபிய மக்களும் கூட்டங்கூட்டமாய்

ஆங்காங் கிருந்தபடியே கைகொட்டித் தத்தம் மகிழ்வை யறிவித்து அவர்களை வரவேற்றனர். அரசர் கரைமேலும், கடலோடிகள் படகிலும் இருந்தால் இருதிறத்தாரும் பேசிக்கொள்வ தெப்படி? ஆகையால் மெலிண்டா அரசர் தம்மை, வாஸ்கோ படகில் கொண்டுபோய் விடும்படி கட்டளையிட்டார். படகில் அவருக்கு ஒரு நாற்காலி போட்டிருந்தார்கள். வாஸ்கோ முழங்காற்படியிட்டுச் சைகை காட்டி அரசரை அதில் உட்காரச் செய்தார். வாஸ்கோ படகில் பாலோவும் வந்து உட்கார்ந்து கொண்டார். திவானியும் **மொழிபெயர்ப்பாளனாய்,** அண்டையில் நின்றான். மூவரும் மன முவந்து உரையாடினர்.

பாலோ : பெரியோரே! இங்குத் தாங்கள் எங்களைப் பெருமை படுத்தியதுபற்றி மனமார்ந்த நன்றி கூறுகின்றோம். தங்கள் நண்பர்களாகவும், பணியாளர்களாகவும் இருக்க நாங்கள் விரும்புகின்றோம். தங்களுக்கும் எங்கள் அரசர்க்கும் நட்பும் உறவும் உண்டாக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அரசர் : கடவுளறிய யானும் அவ்வாறே இந்நலம்பெற முன்பே மனங்கொண்டிருக்கின்றேன். இந்நலங்களை யான் மிகவும் விரும்புகின்றேன். இதற்காகக் கடவுளைப் போற்றவுஞ் செய்கின்றேன். உங்கள் அரசரிடத்தில், என் ஆயுள் வரையில் உடன்பிறந்தான்போல் நடந்துகொள்வேன்.

பின்னர், வாஸ்கோ முழங்காற் படியிட்டு, அரசர் கைகளில் முத்தமிட்டார். அரசர் அவரை வாழ்த்தினர். அப்போது கப்பற்காரர்கள் "அரசரே வருக; கர்த்தர் புகழ் பெறுவாராக" என்று உரத்துக் கூவினர். உடனே, எக்காளங்கள் முழங்கின; பீரங்கிகள் வெடித்தன. இக் கிளர்ச்சி யொலி கேட்டுக் கரையில் நின்றவர்கள் பெருவியப்படைந்தனர். என்று மில்லாத இச்சந்தடி கேட்டு அவர்கள் முடுகித் தள்ளிக்கொண்டு முன்னேறியும் வந்தனர். பொன்பூசிய உறை பெற்ற ஒரு சிறந்த வாட்படையும், மூலாம் பூசிய எஃகு ஈட்டியும், பொன்னூலால் தைத்த செம்பட்டு மூடிய ஒரு பரிசையும் அரசர்க்குக் காணிக்கையாகக் கொடுத்து வாஸ்கோ "பெருந்தகையீர்! புதியராக வரும் நண்பருக்குப் போர்க்கருவிகள் வழங்குவது எங்கள் அரசருடைய பெரு வழக்கம். எதிரிகளின் போர் தாங்குவதற்கென்று, இவை தங்கட்குக் கொடுக்கப்படுகின்றன. உலகத்தில், உயர்புகழ் கொண்ட வீரப்பட்டத்துக் கடையாளம் இவ்வாள். இத்தகைய சிறந்த பொருளாகிய வாளை வழங்கி நிலைநாட்டிக் கொள்ளும் நட்பினை முறித்துப்போடுபவர் தமது பெருமையை முற்றும் இழந்தவராவர். ஆகையால் பெருந்தகையீர், எங்கள்அரசரின் பெயரைச் சொல்லி இப்போர்ப் படைகளைத் தங்களுக்கு வழங்குகின்றோம். தங்களிடம் நாங்கள் அமைதியுடனும், நட்புடனும் ஒற்றுமையாகவும் எப்போதும் நடந்துகொள்வோம்; என்று நாங்கள் வாக்களிக்கின்றோம்," என மொழிந்தார். அதற்கு, அரசர் "எமது போர்த்துகல் அரச நண்பருடன் எப்போதும் ஒற்றுமையுடனும், நட்பு

னும் நாம் நடந்துகொள்வோம்; நபி நாயகர் சான்ருக யாம் இவ்வாக்குக் கொடுக்கின்ரேம். இதனை யாம் எமது குடிகள் எல்லோருக்கும் முன்பு அறைகூவிச் சொல்லுகின்ரேம்'' என்று சொன்னர்.

மெலிண்டா அரசர் தமக்கு மனமார்ந்த நண்பராயினு ரென்றும், அவர் தங்கள் மீது பகை பாராட்டித் தங்களை எவ்வித இடுக்கணுக்கும் உட்படுத்தமாட்டா ரென்றும் உறுதியாய் நம்பினர் வாஸ்கோ. ஆதலால், அவ்வரசர் தமது நாட்டுக்கு வர இரண்டாம் முறை அழைத்தபோது வாஸ்கோ தயக்க மொன்றும் அடைந்தாரில்லை. மறுநாளே அவர் தம்முடைய ஆட்களில் பன்னிருவருடன் சிறப்பு உடை யணிந்து துறை மேடை யடைந்தார்.

அரசருடைய பேரவையினரிற் பலர் அங்கு வந்து நின்று வாஸ்கோவை வரவேற்று அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போயினர். முகவாயிலில் மெலிண்டா அரசர் காத்துக்கொண்டிருந்து காமாவுக்கு நல்வரவு கூறி மார்போடணைத்துக்கொண்டார். அப்போது, வாஸ்கோ முழங்காற்படியிட்டு உடல்குனிந்து வணங்கினர். அரசர் அவரை அரண்மனைக்குள் அழைத்துச் சென்று பட்டுப் பரப்பிய ஓர் உயர் மேடையின்மீது ஒரு சிறந்த இருக்கையில் அமரச் செய்தார்.

"அப்போது, அரசர், காமாவை நோக்கிக் **காம்பே வளைகுடா**வை நீங்கள் நாடிப் போக வேண்டாம். உங்களுக்கு வேண்டிய பொருள்கள் ஆங்கு அகப்படா; அகப்பட்டாலும் விலை மிகுதியாகும். அதற் கப்பாலுள்ள பெரு நகராகிய கள்ளிக் கோட்

டைக்கு வழிகாட்ட கப்பலோட்டிகளை உடன்படுத்துகிறேன். ஆங்கு, அக்கம்பக்கங்களில் மிளகு சுக்கு முதலிய மூலிகைகள் பயிராகிவருகின்றன. உங்கள் நடுவரான திவானிக்கு எல்லாப் பொருள்களின் விலையும் தெரியும். ஆதலால், நீங்கள் ஏமாற வேண்டியதில்லை'' என்று சொல்லித் திவானியையும் பார்த்துப் "போர்த்துக் கேசியருடன் நீ கள்ளிக் கோட்டைக்குப் போகின்றாயல்லவா?'' என்று கேட்டதற்குத் திவானி அவரை நோக்கித் தயக்க மில்லாமல் 'பெரியீர், யான் அவர்களுடன் கள்ளிக் கோட்டைக்கும் போவேன்; கடலெல்லாமும் சுற்று வேன். அவர்களைப்பற்றி எனக்கு நன்றாய்த் தெரியும். அவர்களுடன் எனக்குப் பலநாட் பழக்கம். அவர்கள் என்னைச் சிறக்கப் பாராட்டினார்கள். மாலுமியாரோ தாராள மனத்தர்; அவர் எனக்குச் சிறந்த நன்கொடை யளிப்பார்'' என்று மொழி பகர்ந்தார். திவானியுடைய பேச்சைக் கேட்டவுட னேயே வாஸ்கோ அவருக்கு நன்றிகூறி "ஐய மின்றி அப்படியே தருவேன்; நிரம்பவும் தருவேன். இனிமேல் இந்நாட்டில் போர்த்துக்கேசியர் எங்குச் சென்றாலும் ஊர் மக்கள் அவர்களுக்கு உதவிசெய்ய ஆவல் கொள்ள வேண்டுமல்லவோ? அரசர் பெரு மானே, யான் இந்திய நாடு விட்டுத் திரும்பும்போது தங்களிடம் வந்து எங்களுக்கு ஏற்பட்ட நிகழ்ச்சி களை யெல்லாம் கூறுவேன். அவைகளில் நல் வாய்ப்புக்க ளிருந்தால் அவைகளைப்பற்றி மகிழ் வடையுங்கள். அல்வாய்ப்புக்க ளுண்டேல் அவை களுக்காக எங்கள் பருவரலில் கலந்து வருந்துங் கள்'' என்றார்.

பிறகு, வாஸ்கோ தமக்குக் கோதுமை வேண்டுமென்று கேட்க, அரசர் அஃது அங்குப் பயிராவதில்லை யென்றும், காம்பே வணிகர் அரண்மனைச் செலவுக்குச் சிறிது கொண்டுவந்து கொடுத்திருப்பதாகவும், அதிற் சிறுகூறு கொடுப்பதாகவும் ஒத்துக்கொண்டார். பின்னர், வாஸ்கோ, தாம் உடனே புறப்பட விருப்பதாகச் சொல்லி, அது விரைவில் வேண்டுமென்றார். அப்போது அரசர் "அதுமுடியாத காரியம். மூன்று திங்கள் வரையில் நீங்கள் இங்கேயே இருந்து தீரவேண்டும். இந்தியப் பெருங் கடலில் அதற்குள் உங்கள் பயணத்திற் கேற்ற காற்று அடிக்காது. நீங்கள் பருவக்காற்றோட்டத்தில்தான் கப்பல்களைச் செலுத்தவேண்டும். இப்போது அஃது எதிரேறி யடிக்கின்றது. இப்போதே நீங்கள் புறப்படுவீர்களானல் புயற்காற்றில் சீரழிய நேரிடும். உயிருக்கே இன்னல் நேரினும் நேரும்" என்று முன்னறிவு கூறினர்.

அவ்வாறு அவ்வரசர் சொல்லக் கேட்டதும் காமாவுக்கு முகங் குன்றிப்போய்விட்டது. இந்திய நாட்டைக் காண அவர் மனம் துடிதுடித்ததால் அவருக்கு மூன்று திங்கள் மூன்று ஆண்டுபோலத் தோன்றியன. "பாழுங் காற்றே" என்று மனம் பதைத்தார். இவ்விடையூறு அவர் மனவெழுச்சியைத் தளர்த்தமாட்டாமற்போயினும் அவருக்குச் சிறு அயர்வையும் கவலையையும் தந்தது.

காமா அரசரிடம் விடை பெற்றுத் தன்கப்பலையணுகியபோது, ஆக்கிய சோறு நிறைந்த கொப்பறைகள், காய்ச்சின முழு ஆட்டிறைச்சி, இனிப்

பூட்டிய வெண்ணெய், கோதுமை அடைகள், வேகு வைத்து வறுத்த கோழிக்குஞ்சுகள், காய்கறிகள், அத்திப்பழங்கள், தேங்காய்கள், கரும்புக்குவியல் கள் முதலியன அரசர் பெருமானுல் ஒருபடகில் அனுப்பப்பட்டு ரபேல் கப்பலில் வைக்கப்பட்டிருப்ப தைக் காமா கண்டு மகிழ்ந்தார். மாலுமிகள் அலுவ லாளர்கள், கப்பல் வேலைக்காரர்கள், எல்லாருக்கும் வேண்டிய அளவு உணவுப் பொருள்கள் வந்திருந் தன. மூன்று மாலுமிகளும், கறிகாய், இறைச்சி முதலியவற்றை, மேசைமேல் நிறையப் பரப்பி வைத்துக்கொண்டு உண்டார்கள். ஏனையோரும் மேற்றட்டில் மகிழ்ச்சியுடன் உண்டு களித்தார்கள்.

---

6. செவ்வியருமை

காமா மற்ற விரண்டு துணைத்தலைவர்களுக்கு அரசர் செய்த எச்சரிக்கையைத் தெரிவித்ததும், அவர்கள் "மூன்று திங்களா தங்கியிருப்பது" என்று வருத்த மிகுந்தனர். சேர விருந்தால் செறியும் பகை யாதலால், அவ்வளவு நாள் அங்கேயே தங்கியிருந் தால்தங்களுக்கும், அரசருக்கும் பகை மூளு மென்று அஞ்சினார்கள் மாலுமிகள். மேலும் மொம்பாசாஃ மொஸாஃம்பிக் மக்கள் மெலிண்டா அரசருடைய மனத்தைத மாற்றவும் கூடும், என்றும் ஐயமுற்றனர். இதைத் தடுப்பதற்கென்றே தமது கப்பலாட்களில் நோய்வாய்ப்பட்டவர்களைத் தவிர ஏனையோர் எவ

ரும் கரைகடந்து நாட்டுக்குள் போகலாகாதெனக் கட்டளையிட்டனர். மேலும், அரசரின் மனத்தைக் கலைக்க எவராவது, ஏதாவது அவரிடம் சொல்லும் போது, அதை மறுத்துப் பேசத் திவானியை அரசர் பக்கலிலேயே இருக்கச் செய்யவேண்டு மென்றும் முடிவு செய்தனர். வாஸ்கோ திவானியை அழைத்து "நண்பரே, நீர் அரண்மனை சென்று எப்போதும் அரச ருகிலேயே இருக்கவேண்டும். நீர் அங்கிருக் கும்போது மூரன் எவனாவது, நம்மைப் பற்றிக் கோள்மூட்டிப் பகைச்சொற்களை அரசரிடம் பேசத் துணியமாட்டான். இந்நாட்டு மூரர்களுக்கு நம்மைப் பிடிக்காது; ஏனெனில் வாணிபத்தில் நாம் அவர்க ளுக்கு எதிரிக ளாகிவிடுவோம் என்று அவர்கள் எண்ணி அரசரிடம் நமக்கு எதிராகக் கோள் மூட்ட முயற்சிக்கலாம். நாம் நீண்ட நாட்கள் இங்கேயே தங்கவேண்டி யிருப்பதால், அரசருக்கு நம்மிட முள்ள நல்லுணர்ச்சி குன்றாம லிருக்க நாம் உன்னிப்பா யிருத்தல்வேண்டும்" என்று நயமாய்ப் பேசினார்.

இதைக் கேட்ட திவானி புன்சிரிப்புடன் வாஸ் கோவைப் பார்த்துத் "தலைவரே, யான் ஒரு மூரன் அல்லனோ. என்னை எப்படி நீங்கள் அவ்வளவு நம்ப லாம்?" என்று கேட்க, வாஸ்கோ, "நீர் உண்மை நண்பர் என்று என் மனமே எனக்குச் சொல்லு கின்றது. நீர் எங்களுக்கு நல்லனவே செய்திருக் கின்றீர். இதுவரை யாதொரு கேட்டையும் விளைத் தவ ரல்லர். ஆகையால், யான் உம்மிடம் முழு நம் பிக்கையுட னிருக்கின்றேன்" என்று பதில் சொன் னார். இதனால் திவானி மிக மகிழ்ந்தனர்.

மூரனகிய திவானியின் நேர்மைக்கும், அவனு டைய அன்பின் நீர்மைக்கும் அவனைப் பாராட்டி, அதன் அறிகுறியாகக் காமா ஒருபொன்மாலையை அவன் கழுத்தில் அணிவித்தார். திவானி மகிழ்ந்து அரசரிடம் சென்று அதனைக் காண்பிக்க, அவர் அவனுடைய நற்குணத்தை மெச்சி அவனுக்கு ஒரு பட்டு மேலாடையைப் பரிசளித்தார். தலைமை மாலுமியின் சொற்படி திவானி அன்றுமுதல் அரண் மனையிலேயே தங்கிவிட்டான். அவனுக்கும் அரச ருக்கும் நட்பு மிகுந்தது. மூரன் வேடிக்கை விநோ தப் போக்குடையவ னுதலால், அவனுடன் அரசர் எந்நேரமும் நகைச்சொல்லாடிக்கொண்டிருப்பார்.

நிற்க, வாஸ்கோ தமக்குக் கிடைத்த செவ்வியைச் சிறந்த வழியிற் பயன்படுத்த முடிவு செய்தார். அந்த மூன்று திங்களும் கடலோடிகளுக்கு நிறைய வேலை யிருந்தது. அந்த நாட்களெல்லாம் கப்பல் வேலை களை அயர்வின்றிச் செவ்வையாய்ச் செய்துகொண்டு வந்தனர். கப்பலோட்டிகளையும், காரியக்காரர்களை யும் அழைத்துக் காமா தங்கள் பொழுதை எவ்வாறு கழிக்க வேண்டுமென்று எச்சரித்தார். கப்பல்கள் செவ்வனே பழுதுபார்க்கப்படவேண்டும். எதிர் காற்று வரின் கடற்போக்கு நீடிக்கு மாதலால், அதற்கேற்ற பல உணவுப் பொருள்களும் தேடியாக வேண்டும். எல்லாவற்றையும் காமா அவர்கட்குக் குறிப்பித்தார்.

ஆட்கள் கப்பல்களில் ஏற்பட்டிருந்த ஓட்டை உடைப்புகளை யெல்லாம் பழுதுபார்த்தனர். மேற்

பக்கங்க ளெல்லாவற்றிற்கும் மெழுகு எண்ணெ யைப் பூசித் தண்ணீர் படியாமற் செய்தனர். தேங் காய் நார் தருவித்துக் கயிறுகள் திரித்துக்கொண் டார்கள். அக்கயிறுகள் திரும்பக் கிளம்பி (rubber போன்று) நீளுமாகையால் வேலைகளுக்கு நன்கு உதவின. அவர்கள் தங்கள் நாட்டினின்றுங் கொண்டுவந்த வடங்களைவிட இவை உப்புத்தண்ணீ ரில் தாக்குக் கொடுக்க மிக்க வலிவுள்ளனவாகக் காணப்பட்டன. வாஸ்கோ, லிஸ்பன் நகரை விட் டுப் புறப்படுவதற்குச் சில நாட்கள் முன்பே தம் ஆட்களை இக்கைத்தொழில்களில் பழக்கி வைத்தா ரென்பது அப்போது தெளிவாயிற்று. சிலர் வடங் களும் கயிறுகளும் முறுக்கினர். சிலர் தச்சுவேலை செய்தனர். கப்பற்கட்டுங் கயிறுகள் திரிக்கும் வேலை பெரும்பாலும் கரையிலேயே நடந்தது. அதில் மூரர்களும் கலந்துகொண்டு கூலிக்கு வேலை செய் தனர்.

அவ்வேலைகளுடன் உணவுப்பொருள் தேடு தலும் விரைவாய் நடந்தது. மெலிண்டாவுக்கு அருகே ஓடும் அருவிகளினின்றும் நிறையக் குடிநீர் கொண்டுவந்து கப்பலில் சேர்த்து வைத்துக்கொண் டனர். இறைச்சி, காய்கறி, மாப்பண்டம், பழம் முதலியவைகளையும் ஏராளமாக வாங்கிக்கொண்டு வந்து பதப்படுத்தித் தக்கபடி சேர்த்துக்கொண்ட னர். உணவுப்பொருள் தேடுவதில் அரசர் மிக்க உதவிசெய்தார். "போர்த்துக்கேசியருக்குக், கடைக் காரர்கள் உணவுப்பொருள்களை விலைதூக்கி விற்றல் கூடாது" என்று கட்டளையிட்டு மீறி நடப்பவர்

களின் இல்லங்கள் தீக்கிரையாக்கப்படும் என்றும், பறையறைவித்துவைத்தார்.

வாஸ்கோவும் மற்ற இரு மாலுமிகளும் அச்சமின்றி அடிக்கடி கரை செல்வார்கள். அரசர் நட்போ அணுவளவுங் குறையவில்லை. மாலுமிகள் அவருடன் அடிக்கடி விருந்துண்பார்கள். மூவருங் கூடி நகரைச் சுற்றவும் பேட்டைகளில் வேடிக்கை பார்க்கவும் செல்வார்கள். அரண்மனையை அடுத்துள்ள பூங்காவில் உலாவப் போவதுமுண்டு.

அவ்வாறு மூன்று திங்களும் நன்கு கழிந்தன. மாலுமிகள் அரசரை விட்டு அரிதிற் பிரியும் நாள் வந்தது. கப்பல்கள் கடலோடும் நாள் ஆகஸ்டு ஆறு என்று ஏற்பாடு செய்தனர். முன்னாள் மாலையில் கணக்கற்ற படகுகள் பற்பல பண்டங்களை ஏற்றிக் கொண்டு நாவாயை நண்ணின. அரிசி, வெண்ணெய் வேகவைத்த இறைச்சி, ஆடுகள், கோழிகள், காய்கறிகள். தேங்காய்கள், பழங்கள், சர்க்கரை மூட்டைகள் முதலியன கொண்டுவந்திறக்கின அப்படகுகள். அரசரின் பிரிவுவரிசையின் அருமைதான் என்னே!

மறுநாட்காலை கப்பல்களை வழிகூட்டியனுப்பக் காவலர் கப்ப லருகே வந்தார். அவர் வாஸ்கோவையும், பாலோவையுங் கட்டி யணைத்துக்கொண்டு "நீங்கள் திரும்பும்போது என்னிடம் வந்து போக மறந்துவிடாதீர்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். அரசன் தோணிக் கரைக்குத் திரும்பும்போது எக்காளங்கள் ஒலித்தன. வெடிகுண்டுகள் வெடித்தன. கப்பலில் இருந்தவரெல்லாம் கைகொட்டி

"கடவுளாகிய கர்த்தர் உம்மோடிருப்பாராக" என்று உரத்த குரலிற் சொல்லி ஆரவாரித்தனர்.

பாய்களை விரித்து விடும்படி காமா கப்பலாட்களுக்குக் கட்டளையிட்டான். நல்ல காற்றும் போக வேண்டிய திசை நோக்கி அடித்தது. மெலிண்டா துறையிலிருந்து கப்பல்கள் இரண்டும் சிறப்புடன் கடலிற் சென்றன. கப்பல்கள் நடுக்கடலை நாடாமல் கரையோரமாகவே ஆங்காங்குள்ள காட்சிகளைக் கண்டுகொண்டு விரைந்து சென்றன. வருத்தம் நிறைந்த கடற்பயணத்தில் இன்னும் அவர்கள் ஈராயிரம் கல்தொலை கடக்கவேண்டும். வாஸ்கோடகாமாவோ தண்மைத் தன்மையும், தெளிவறிவும், களிமனமும், விடாமுயற்சியும் தன்னம்பிக்கையு முள்ள தலைவ ரன்றோ! ஆகையால், இந்தக் கடற்பயணத்தில் கப்பலில் இருந்தவர்கள் யாரும் இந்திய நாட்டைக் கண்ணுற் பாராமல் தாய் நாடு திரும்பமாட்டோம் என்ற உறுதிப் பாட்டோடு முகமலர்ந்து கப்பல்களை நடத்திக்கொண்டு போனார்கள்.

—

7. காணாதது கண்டது

எவ்வளவு ஆவலோடும் நம்பிக்கையோடும் இந்தியப் பெருங்கடல் கடந்து போனார். சிந்தைதளரா வாஸ்கோ மாலுமி! ஒரு நிலையற்றகருங்கடல் கடப்பது எத்தனை நாளிலோ! எவ்வளவு தொலையோ! தாய் நாடு விட்டுத் திங்கள்பல சென்றன. இடுக்கண்களுக்கெல்லாம் ஈடுகொடுத்து இந்தியாவைக் காணும் பெருநோக்கம் ஈடேறி, ஆங்குள்ள அரசரின் நட்புப் பெற்று, அங்குள்ள பொருள்களைக் கப்பலில் ஏற்றிக் கொண்டு திரும்பிவிடுவாராயின் காமாவுக் குண்டாகும் செருக்கும் பெருமிதமும் இவ்வளவினையுடைன வென்று எண்ணிப் பார்க்கத்தான் முடியுமோ? புத்தம் புதுச் செய்திகளோடும் மதிப்பற்ற பொருள்களோடும் எவ்வளவு இறுமாப்புடன் வாஸ்கோ லிஸ்பன் பெருந்துறை புகுவார்! தெரியாத வழி தெரிந்து நாடாத நாட்டைத் தேடிக் கண்டு திரும்பினர் காமா வென்றால் போர்த்துகல் நாட்டார் மாத்திரமோ அவரைப் புகழ்வார்கள்! ஐரோப்பாக் கண்டம் முழுதும் அவரை ஏற்றிப் போற்று மன்றோ! கொலம்பசுக்குப் பிற்பட்டவர் அல்லர் வாஸ்கோ என்று எல்லோரும் எண்ணுவர்! மக்கள் அவரை எவ்வளவு சிறப்பித்தாலும் அது மிகையாகா தன்றோ! அவருடைய செயற்கரிய வீரச் செயல்கள் வரலாற்று நூல்களில் உலகுள்ளளவும் நிலைநின்று அக்கால மக்கட்குப் பெருவியப்பை விளைவிக்கு மன்றோ? கண்ணுக்கெட்டாத கடலில் கருத்தொத்த காற்று வீசக் களிப்புடன் கடலோடும் காமாவுக்கு இம்மேன்மை

யான எண்ணங்கள் மனத்தின்கண் உண்டாயிருக்கு மென்பதில் ஐயமு முண்டோ? தாம் பார்க்கும் பேறு பெற்றுள்ள இந்தியநாட்டைப் பெருவிழைவுடன் நோக்குவது போல மேற்றட்டினின்று காமா கடல் நீர்ப் பரப்பைத் திறந்த கண் மூடாது உற்று நோக்கிப் பார்த்தவண்ண மிருப்பார்.

தங்கள் நேரான வழியிலேயே செல்வதால் மலையாள மலைகளைப் பார்த்து மகிழப் பலநாட்க ளாகா வென்று மெலிண்டி கப்பலோட்டிகள் சொல்லும் போ தெல்லாம் காமா அதனைக் கருத்தூன்றிக் காது கொடுத்துக்கேட்பார். இரண்டு கப்பல்களும் ஒன்றை யொன்று அடுத்தே செல்லக் காமா தன் உடன் பிறந்தாருடன் உவகையுடன் உரையாடிக் கொண்டே போனார்.

இரு கப்பற்றலைவர்களும் கப்பற்காரர்களும் மனவெழுச்சியும் மகிழ்ச்சியும் கொண்டார்கள். வீடு திரும்பும் எண்ணமும் தலைவர் சொல்லை மறுக்கும் எண்ணமும் அவர்கள் மனத்திற் றோன்றவே யில்லை. வாஸ்கோ மூரர்களோடு பேசிக்கொண்டேபோனதினால் இந்தியநாட்டைப்பற்றியும் ஆங்குள்ள மக்களைப் பற்றியும் வேண்டிய வளவு அறிந்துகொண்டார். மூரர்களிற் சிலர் அங்குச் சென்று வந்தவர்களாதலால் காமாவின் கருத்துக் கினிய சிறந்தசெய்திகளை அவர்கள் தெரிவிக்கக் கூடியவர்க ளாயினர்.

எவ்வித விடையூறு மின்றி நலமுறவே பயணம் போனார்கள். அவ்வாறே பல நாட்கள் நன்கு கழிந்தன. போகும்வழியில் இடையூ றொன்றும் ஏற்பட

வில்லை. கப்பல்கள் தடைப்பட்டுத் தங்கியதுமில்லை. இவ்வாறு நாட்கள் செல்ல, ஒருநாட் காலை மெலிண்டாக் கப்பலோட்டி தன் தொப்பியைக்கழற்றிக் கொண்டு மனநிறைவு பூண்டு காமாவைக் கிட்டி, “மாலுமியே! இந்தியக்கரை அணுகிவிட்டோம். ஐயமில்லை. நாளைக் காலையே நாட்டைக்கண்டுவிடுவோம்” என்று முகமலர்ச்சியுடன் மொழிந்தான். அதைக் கேட்ட வாஸ்கோ உள்ளந் துடிதுடித்தவராய் ஆண்டவனை மனமார நினைந்து வாயார வாழ்த்தினர். அவர்அந்தக் கப்பலோட்டிக்கும் நன்றி கூறி ‘உனதுமுன்னுரை உண்மையாகக்கடவது” என்று வாழ்த்தினர்.

வாஸ்கோ அன்றிரவு நல்ல உறக்கம் கொண்டிருக்கமாட்டார். விடிந்ததும் அவர் மேற்றட்டில் நின்றுகொண்டிருந்தார். அதுகண்டு யாவரும் அங்குச்சென்று கீழ்த்திசையையே நோக்கி இந்திய நாட்டுத் தரையைக் காண்பதற்கு முந்தி முந்திப் பார்த்தபடி இருந்தனர். பலர் கப்பல்களின் உச்சிகளில் தொத்திக்கொண்டும் அத்திசை நோக்கிய வண்ணம் இருந்தனர்.

திடுமெனத் “தரை,” “தரை” என்ற பேரொலி கேட்டது. ஒரு கணத்துக்குள் கப்பலோட்டி ஓடோடியும் வந்து களி மிகுதியால் காமாவை வணங்கி ஆர்வத்தால் துடிக்கும் தன் விரலினல் வானடியைச் சுட்டிக் காட்டி, “அதோபாருங்கள், தலைவரே, இந்தியநாட்டுத்தரை!” என்றுகூவினர். பலர் இங்குமங்கும் ஓடினர். சிலருக்குக் களிப்புக் கண்ணீரும் தானகவே ஒழுகியது. சிலநேரம் அலுவலாளர்

களென்றும் ஆட்கள் என்றும் வேறுபாடே இன்றி நடமாடினார்கள். பன்னாள் நோக்கம் அந்நாளில் நிறைவேறி விட்டதன்றோ!

சிறிது நேரத்துக்கெல்லாம் வாஸ்கோவின் பெருங்குரல் மேலோங்கி யெழ, உடனே அமைதி யுண்டாகிவிட்டது. அவர் கீழ்த்திசையைச் சுட்டிக் காட்டி, "அதோ, அதோ தெரிகிறது இந்தியா! இங்கு நம்மை யெல்லாம் நலமுறக் கொண்டுவந்து சேர்த்த கடவுளை வணங்கி வாழ்த்துவோம்" என்று கூறினார்.

அவ்வாறு சொல்லிக்கொண்டே வாஸ்கோ முழங் காற் படியிட்டார். அங்கிருந்த மற்றையோரும் அவ் வாறே செய்தனர். அப்போது போற்றிமொழிகள் யாரும் கூறவில்லை. மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுங்கால் வாய்மொழிக்கு இடமேது? பின்னர், எல்லோரும் கிழக்கு நோக்கியபோது அவ்வரும்பெரும் செய்தி உறுதியாயிற்று: அதனைப்பற்றி ஐயமேயில்லை. தெரிந்ததும் தெரியாததுமா யிருந்த அக்கரைக்குத் தொலையில்குன்றுகளின்உச்சிகளின்மேல்பகலவன் கிரணங்கள் படிந்து ஒளிகாட்டி நாட்டின் இருப்பை விளக்கமுறச் செய்தன. வாஸ்கோ அப்போது, மூரரான கப்பலோட்டிகளைத் தன்னிடம் கூப்பிட்டு அவர்கள் கொண்ட ஊக்கத்திற்கும் அன்புக்கும் நன்றி கூறி, அவர்கள் ஒவ்வொருவருக்கும் செம்மை நிற அங்கியையும் பணத்தையும் உள்ள முவப்பக் கொடுத்துதவ, அவர்கள் அவற்றைப் பெருமகிழ் வோடு பெற்றுக்கொண்டனர்.

பிறகு கப்பல்கள் கரையோரமாகச் சென்றன. வெயிலொளி காட்டக், கரையிலிருந்த பொருள்க

ளெல்லாம். நன்கு தெரிந்தன. சிறிது நேரத்திற்கெல்லாம் கடலோட்டி வந்தவர்கள் கரையிற் கூரை வீடுகளையும் மீன்படகுகளையும் கொண்ட ஒரு சிறு நகரைக் கண்டார்கள். ஆங்கிருந்த வலைஞர் கப்பல்களை வியப்புடன் காணப் படகேறிவந்து கப்பல்களி லிருந்தவரைக் கண்டார்கள். "கள்ளிக்கோட்டை இவ்வளவு கேவலமான பட்டினமா?" என்று ஏமாந்து போனர் மாஸ்கோ. உடனே, மூர் கப்பலோட்டி அவரைப் பார்த்து, "இது கன்னனூர்: கள்ளிக்கோட்டை, இதற்குத் தெற்கே முப்பதுகல் தொலையில் இருக்கின்றது" என்று அவரைத் தேற்றினன்.

---

8. அருநகர் கண்டதும் ஐயங் கொண்டதும்

கப்பல்கள் கரையோரமாகவே தெற்கே சென்றன. காண நகராகிய கள்ளிக்கோட்டையை மறுநாளே கண்டுவிடலா மென்னும் உறுதிகொண்டவராய்க் காமா அன்றிரவு கலக்கமற்றுக் கண்ணுறங்கினர். மறுநாட் காலைப்பொழுது அழகா யிருந்தது. காற்றும்நேர்மையாக அடித்தது. கள்ளிக்கோட்டையுங் கண்கொண்ட தொலையில் காணப்பட்டது. குன்றுகளும் பகலவனெளியில் பளபளத்துத் தோன்றின. அகன்ற துறைவெளி அணிபெற விளங்கிற்று; அத்துறையில் நாலாபக்கங்களிலு மிருந்து வந்த கப்பல்களெல்லாம் நின்றுகொண்டிருந்தன.

வளைகுடாவிற்குள்ளேசெல்வதற்கும் கரையின் அருகே கப்பலை நிறுத்தவும் வாஸ்கோ துணிந்தா ரில்லை. ஏனெனில் உள்நாட்டார் தம்மிடம் எவ்வாறு இருப்பார்களோ வென்று அவர் மனம் திடப்பட வில்லை. மேலும் தம்மிடம் வலியற்ற இரண்டு கப் பல்களே இருந்தாலும், துணைவலி மிகக் குறைவு என்பதாலும் அந்நிலையில் தம்மை அவர்கள் எதிர்த் தால் எவ்வாறு தப்புவது என்று ஐயமுண்டாயிற்று. கள்ளிக்கோட்டையிலிருந்து நாலைந்து கல் தொலை யில் ஒரு சிறுநகர் உண்டு. அந்தக் கரையோரத் தில் கப்பல்கள் அச்சமின்றித் தங்கி யிருக்கலாம். படகுகள் போகவரவும் அவ்விடம் தகுதியானதாகக் காணப்பட்டது. அங்கேயே அன்றிரவு தங்கி யிருக் கத் துணிந்தார் வாஸ்கோ. அன்றிரவு மாலுமி களையும் மூரன் திவானியையும் அருகழைத்துக் கள் ளிக்கோட்டை அரசரிடம் எவ்வாறு நடந்துகொள் வதென்பதைப்பற்றிக் கூடிப் பேசலாயினர்.

மறுநாட்காலை, தாமே கள்ளிக்கோட்டை அரச ரான சாஃமொரினிடம் நேரிற் சென்று, வந்த காரியத் தை எடுத்துச் சொல்லவேண்டுமென்று முதன்முதல் பேசினர் வாஸ்கோ. அரசர் மாறுபட்ட எண்ணத் துடன் என்ன செய்வாரோ என்று நினைத்து, அவர் தன்மையை யாரும் அறிந்து கொள்ள வில்லை யாத லால், வாஸ்கோ சொன்னதை மறுத்துப் பேசினன் திவானி. அவன் “முதன் முதல் நாம் செய்யவேண் டுவது என்ன வென்றால், கீழ்நாடுகளின் வழக்கப் படி பிணையாளரை நம்மிடம் அனுப்பி வைக்கும்படி அரசரைக் கேட்க வேண்டும்” என்று வாஸ்கோ வுக்கு எடுத்துச் சொன்னன்.

மறுநாள் கதிரவன் தோன்றியதும் பல படகு கள் கப்பலைச் சூழ்ந்து நின்றன. இடுப்பில் மாத் திரமே ஒற்றைத்துணி யணிந்து கொண்டிருந்த மலையாளிகள் அப்படகுகளில் இருந்தனர். புதியோ ராக வந்தவர்கள் யாவர் என்றும், அவர்கள் எங்கி ருந்து வந்தார்கள் என்றும் அறிய ஆவல் கொண்ட வர்களாக அவர்களுடைய முகக்குறியால் தெரியவந் தது. அவர்களுக்குப் பின்னல் கரையில் மக்கள் கூட் டங் கூட்டமாக வந்து நிறைந்தனர். கடலி லிருந்து திடுமெனத் தோன்றிய அரக்கர்களோ வென அச் சங்கொண்டு கப்பல்களை ஏறிட்டுப் பார்த்தவண்ண மிருந்தனர் அக்கூட்டத்தார். கப்பல்களைச் சூழ்ந் திருந்த படகுகளுள் சிறுமீன் தோணிகளும் காணப் பட்டன. அவை கப்பல்களி னருகில் வந்து நின்றன. வலைஞர்களைக் கூப்பிட்டு மீன்வாங்கிக் கொள்ளக் காமா தம் ஆட்களுக்குக் கட்டளை யிட்டார். அவர் கள் கப்பல்களுக்குள் கடுக ஏறி வந்து மீன் விற்று, விலையாகத் தாங்கள் பெற்ற வெள்ளிக்காசு களைக் கண்டு களிப்புடன் திரும்பிப்போயினர்.

உடனே, விறகு படகு ஒன்று கப்பலண்டை வந்தது. கப்பலில் விறகு மிகுதியாக யிருந்த தால் வாஸ்கோ வாங்க மறுத்து விட்டார். விறகுக் காரர்கள் ஏமாந்து போய்த் திரும்பிவிட்டதை வாஸ் கோ அவர்தம் முகக்குறியாற் கண்டு அவர்களுக்குச் சிறுதொகை கொடுத்து அவர்களை அனுப்பக் கட் டளையிட்டார். அப்போது, திவானி அவர் ஏன் அவ் வாறு செய்தார் என்று வாஸ்கோவைக் கேட்டார். அதற்கு வாஸ்கோ, "அவர்கள் ஏழைகள்; விறகு

விற்க வந்தார்கள்; ஏமாந்துபோனார்கள்; அவர்கள் வருந்தி வந்த கூலியாவது வேண்டாமா? ஆகையால், அவர்களுக்குப் பணம் கொடுத்தேன்! என்னிடம் வேலையாக வருபவர்களுக்கு யான் அவ்வாறு செய்வது வழக்கம்" என்று சொன்னார். வாஸ்கோவின் இம் மறுமொழி விறகுக்காரர்களுக்கும் தெரிவிக்கப் பட்டது. இச் செய்தி ஊரிலுள்ளார்க்கும் தெரிய வர அவர்கள் "போர்த்துக்கேசியர் மிக நல்லவர்கள்" என்றுபேசிக்கொண்டார்கள்.

கள்ளிக்கோட்டைக் கரை சேர்ந்ததுமுதல் மூன்று நாட்களில் வலைஞரிடமிருந்து மீன் வாங்கும் வேலையைச் செய்தார்களேயொழியப் போர்த்துக்கேசியர் பிறிதொன்றுஞ் செய்தாரில்லை. நான்காம் நாள் ரபேல் கப்பலிடம் ஒரு பெரும்படகு வந்துசேர்ந்தது. அதில் உயர்குலத்தோன் ஒருவன் வந்தான். அவனை "நாயர்" என்று சொல்லுவார்கள். அவன் சாமொரினிடமிருந்து வந்த ஒரு செய்தியாளன். இந்நாயரும் இடுப்பைச் சுற்றி ஒரு வெள்ளைத்துணியே கட்டிக்கொண்டிருந்தான். அவன் ஒரு சிறு வட்டக் கேடயமும், சில மரக்கவண்களும், இருப்புப் பிடி போட்ட உறையற்ற ஒரு சிறு வாளும் உடன் கொண்டுவந்தான். அவன்தலைமயிர் சடைகட்டிப் போயிருந்தது. அவன் நெட்டையன்; உயரத்திற் கேற்ற உடலமைப்பையும் பெற்றிருந்தான்.

அங்கு வந்த நாயர், வாஸ்கோ கப்பலுக்கு வர மறுத்துத் தன்படகிலேயே இருந்துகொண்டு ஒரு மொழிபெயர்ப்பாளன் வாயிலாக வாஸ்கோவிடம் பேசினான். அந்த அயல் நாட்டார் யாவர்; அவர்

களுக்கு கள்ளிக்கோட்டையில் என்னவேண்டும்?" என்பதே அவன் அறிய விரும்பியது. அதற்கு, வாஸ்கோ, "யான் என்னுடைய செய்தியை இன்னும் சாஃமொரினுக்கு அனுப்பவில்லை; அதற்காக அரசரின் கட்டளையை எதிர்பார்த்திருக்கின்றேன். ஆயினும், உன்னுடன் ஒரு செய்தியாளனை அனுப்பி வைக்கிறேன்; அவன் அரசருக்கு மறுமொழி பகர்வான்" என்றுசொன்னார்.

அவ்வாறே, அந்நாயருடன் மூரனாகிய திவானி சென்றான். திவானி சஃமொரின்முன் சென்று வாஸ்கோ கற்பித்தபடி அவரிடம் சொன்னான். "உலகத்தில் மிகப்பெரிய கிறித்து அரசரிடமிருந்து இப்போர்த்துக்கேசியர் இங்கு வந்தனர். அவ்வரசர் தங்களுடன் நட்புக்கொள்ள விரும்புகின்றார். அவர் விலையுயர்ந்த துணிகளையும், பொன்னையும் வெள்ளியையும், பண்டமாற்றாக அனுப்பிவைத்திருக்கின்றார். அவைகட்கு மாற்றுப்பொருள்களாக இவ்விடமிருந்து மிளகும் மருந்துப்பொருள்களும் தம் நாட்டுக்கு அனுப்பிவைக்கவேண்டுகின்றார்" என்றான்.

திவானி சொன்னதைக் கேட்ட **சாஃமொரின்** மிகுந்த வியப்படைந்து தம் அவையினருடன் போர்த்துக்கேசியரைப்பற்றி அக்கரையும் ஆவலுங் கொண்டு பேசத் தொடங்கினர். இடையில் அலுவலாளரி லொருவன் திவானியைப் பார்த்து, அவன் போர்த்துக்கேசியருடன் சேர நேர்ந்த தெவ்வாறெனவினவினான். அப்போது திவானி மெலிண்டா அரசருக்குக் கண்ணியங்காட்டிக் கொடுத்த தாராள பரிசுகளைப்பற்றிப் பேசினான். அப்போது சாஃ

மொரின் தம்நாட்டு வாணிபப் பெருக்கில் நோக்க முடையவராய் இப்பேச்சைக் கேட்டுத் திவானியை நோக்கிப் "போர்துக்கேசியர் கள்ளிக்கோட்டைக் குள் தடையின்றி வந்து போகலாம். அவர்களுக்கு எவ்வளவு மிளகும் எவ்வளவு மருந்துப்பொருள்களும் கொண்டுபோக முடியுமோ அவ்வளவும் யான்அவர் கள் கப்பலிற் கொண்டுபோய் நிரப்புவேன்" என்று அன்புடன் சொன்னர். திவானி புறப்பட்டபோது அரசர் திவானியிடம் வாஸ்கோ மாலுமிக் கென்று அத்திப்பழுங்களும் கோழிக்குஞ்சுகளும் கொடுத் தனுப்பினர்.

நற்செய்திகளுடன் அரசரிடமிருந்து மூரன் திரும்பி வந்தது மாலுமிகளுக்கு மிக்க மகிழ்ச்சியை யுளித்தது. "அரசர் நமக்கு அன்புள்ள நண்பராய் விட்டார். நாம் நமது நாட்டுக்குத் திரும்பிப்போகும் போது விலையுயர்ந்த வாணிபச் சரக்குகளை நமது கப்பல்களில் நிரப்பிக்கொள்ளலாம் என்று அவர் கள் மகிழ்ந்தனர்.

அரசர் அன்பும் நட்புங்கொண் டனுப்பிய பொருள்களுடன் பெரு விருந் தயர்ந்து, மறுநாளே வேறு செய்திகளுடன் திவானியை அரண்மனைக்கு அனுப்பி வைக்கவேண்டு மென்று அப்போதே முடிவு செய்தனர்.

அவ்வாறே அடுத்த நாட் காலையில் திவானி கரை யேறிக் காவலரைக் கண்டு, "நண்பராகிய அர சரே, தமக்குக் காப்பாகத், தங்களுடன் 'நல் உடன் படிக்கை செய்துகொண்ட பின்னரே வாணிபத்தில் ஈடுபட வாஸ்கோ மாலுமி விரும்புகின்ருர். ஆகை

யால், அரசர்கோமானே! பிணையாளிகளாகச் சிலரை வாஸ்கோவிடம் அனுப்பிவைக்க வேண்டுகின்றேன். அதன் பிறகுதான் வாஸ்கோ, தங்களை வந்து நேரிற் கண்டு போர்த்துக்கல் நாட்டரசர் தங்கட் கனுப்பியிருக்கும் பட்டோலையைத் தங்களிடம் சேர்ப்பார்" என்று சொன்னான்.

சாமொரின் அரசர் வாஸ்கோவை வரவழைத்துப் பேச மிக்க அவாக் கொண்டார். அதைப்பற்றி அவர் தம் அமைச்சர்களுடன் பேசினார். வாஸ்கோவோ தாம் அஞ்சிய தொல்லைகளெல்லாம்தொலைந்து போயின வென்றும், தம்மிடம் அரசருக்கு நம்பிக்கையும் நட்பும் உண்டாய்விட்டன வென்றும் மன நிறைவோடு மகிழ்ச்சிகொண்டிருந்தார். போர்த்துகேசியரைக் கள்ளிக்கோட்டையை விட்டுத் துரத்தி விடவேண்டுமென்று சொல்லிக் காவலர் மனத்தை அந்நகர மக்களிற் சிலர் கலக்கிக்கொண்டிருந்ததை அவர் எவ்வாறு அறிவார்.?

9. இடுக்கண் வருங்கால் நகுக

கள்ளிக்கோட்டையில் செல்வமும் செல்வாக்கு முடையவர்களாயிருந்த [1]அராபிய வணிகர்கள் துறை வெளியில் போர்த்துக்கேசியக்கப்பல்கள் வந்திருந்ததைக் கேட்டு ஏக்கமுற்றனர். தங்கள் வாணிபம் ஐரோப்பியரால் முழுதும் கெடாது. ஆயினும், அவர்கள் வாணிபத்தில் தங்களுக்குப் போட்டியாகவாவது ஆகக் கூடுமே என்று அராபியர்கள் அச்சங்கொண்டனர். அராபியர்கள் அதுவரையில் போட்டியின்றி வாணிபத்தை நடத்திக்கொண்டுவந்து மேன்மேலும் செல்வம் திரட்டினர்கள். அப்போது வந்திருந்த ஐரோப்பியர்கள் முன்னேடிகளாகிய ஒற்றர்களே. அவர்கள் திரும்பிச் சென்றபின், அந்நாட்டு வணிகர்கள் அவ்வப்போது கூட்டங் கூட்டமாக வந்து தாம் வாங்கும் விலையுயர்ந்த சரக்குகளை யெல்லாம் கொண்டுபோய் விடுவார்கள் என்று அராபியர் அஞ்சினர்கள்.

அதனல், கள்ளிக்கோட்டையிலிருந்த அராபியர்க ளெல்லோரும் ஒன்றுகூடிப் போர்த்துக்கேசியரிடம் சாமொரினுக்குப் பகைமூட்டவேண்டியதைச் செய்து அவருக்கு அச்சத்தை யுண்டாக்கி இவர்களைத் துரத்திவிட முயலவேண்டு மென்று முடிவு செய்தார்கள். இச் செய்தி விளம்பரமாக அக்கம்பக்கங்களிலிருந்த அராபியர்க ளெல்லாம் கள்ளிக்கோட்டையில் வந்து கூடிவிட்டார்கள்.

---

1. Arab merchants.

சாமொரின் அலுவலாளர்களில். செல்வத் துறைத்தலைவர் ஒருவரும்,கோசிஃல் என்னும்பெயர் கொண்ட வழக்கியல் அமைச்சர் ஒருவரும் இருந் தார்கள். இவ்விருவருக்கும் அரசரிடத்தில் மிகுந்த செல்வாக் குண்டு. அவர்கள் இருவரும் நேர்மை யற்றவர்கள்; பேராசைக்காரர்கள். இருவரும் கைக் கூலி வாங்குபவர்கள்.

அராபியர்களில் முதன்மையானவர்கள் செல் வத்துறைவரிடமும் நெறித்துறை அமைச்சரிடமும் சென்று "உங்களுக்கு வேண்டிய பணம் கொடுக் கின்றோம். நீங்கள் அரசருக்குப் போர்த்துக்கேசிய ரிடம் அச்சமும் ஐயமும் அருவருப்பும் உண்டாக்கி விட வேண்டும். நீங்கள் கட்டாயமாய் அரசரிடம் பின்வருவன சொல்லவேண்டும்: போர்த்துக்கேசிய ரோ பெருஞ் செல்வர்கள். பிற சமயத்தினர். அவர் கள் இங்கு வாணிபத்துக்காக வரவில்லை. செல்வத் தில் சிறந்த இவ்விந்திய நாட்டைப் பிடித்துத் தம தாக்கிக்கொள்ளவேண்டு மென்பது அவர்கள் எண் ணம். அதை முன்னிட்டு ஊர் உளவறிய ஒற்றர் களாய் வந்தவர்களே வாஸ்கோ கூட்டத்தார். இவர்கள் தங்கள் நாடு சென்றபின் நாவாய்களோடு பெருங் கூட்டத்தார் போர்க்கருவிகளுடன் இங்கு வந்து நம் நாட்டையும் அக்கம்பக்கத்து நாடுகளை யும் கைப்பற்றிக்கொண்டு சிறுகச் சிறுக இந்திய நாடு முழுவதையுமே வாயில் போட்டுக் கொள்ளு வார்கள். ஆகையால், இத்தகைய பொல்லாத போர்த்துக்கேசியர்களை ஊரை விட்டு உடனே ஐரோப்பா திரும்பும்படி செய்துவிட்டு மறுவேலை பார்க்கவேண்டும்."

சாஃமொரினுடைய அவ்விரண்டு அமைச்சர்களும் அராபியர்கள் சொன்னது உண்மையேயென்று தங்கள் கருத்திற்கும்தோன்றியதாக நடித்துக் காட்டிக் கொண்டார்கள். அவர்கள் இருவரும் அராபியர் கொடுத்த பணத்தை வாங்கிக்கொண்டு அவர்கள் சொல்லியபடியே அரசரிடம் தெரிவிப்பதாகவும் பொய் சொன்னார்கள்.

அராபியர்கள் போனபின் செல்வர்கள் இருவரும் தமக்குள் 'நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். அராபியர் சொன்னதை யெல்லாம் அப்படியே அரசரிடம் சொல்லிவிடல் கூடாது; அரசருக்குப் போர்த்துக்கேசியரிடம் ஐயுறவு உண்டாகும்படி எவ்வளவு சொல்லவேண்டுமோ அவ்வளவு சொல்லி விட்டுவிடவேண்டும்; சாஃமொரின் நமது சொல்லைக் காதில் போட்டுக்கொள்ளாமல் வாணிப ஆசைகொண்டு வந்திருக்கிறவர்களுடன் நட்புக் கொண்டு ஒற்றுமையுடன் நடந்தால் அப்போது நமது பேச்சை மாற்றிப் பேச நமக்கு வழியிருக்க வேண்டும். இதற்கிடையில் அராபியர்களிட மிருந்து எவ்வளவு பொருள் கறக்கலாமோ அவ்வளவும் கறந்து கொள்ள வேண்டும்' என்று பேசிக்கொண்டார்கள்.

நெறித்துறை அமைச்சர்மட்டும் தனித்து அரசரிடம் சென்றார். நிதியாளரும் தாமும் பேசிக்கொண்டபடி போர்த்துக்கேசியரைப்பற்றி அளவாகவே பொல்லாங்கு சொல்லிவிட்டுப் போனார். அரசரோ வாணிபப்பித்துக் கொண்டிருந்தவர். கள்ளிக்கோட்டை செல்வம் மிக்க நாடாகவேண்டும்

என்னும் நோக்கமுடையவர். மெலிண்டாவில் போர்த்துக்கேசியர் தாராளசிந்தையோடு செய்த செயல்களையெல்லாம் திவானி வாயிலாகக் கேட்டிருந்தா ரன்றோ சாமொரின். வாஸ்கோட காமா துணையால் வேற்றுநாட்டு வாணிபம் தொடங்க வேண்டுமென்றே அவர் தீர்மானித்துக்கொண்டார். ஆயினும், அமைச்சருடைய மொழிகள் தம் மனத்திற் பதிந்திருந்தபடியால் அவர் வாஸ்கோ கேட்டுக்கொண்டபடி பிணையாளரை அனுப்பிவைக்கத் தயக்கங்கொண்டார். ஆயினும், அவர் வாஸ்கோவுக்கு "நீங்கள் உங்களுள் எவரையாவது ஊருக்குள் அனுப்பிவையுங்கள். நகரைச் சுற்றிப் பார்த்து வேண்டிய பொருளை வாங்கச் செய்யுங்கள். அவருக்கு நகரில் எத்தகைய இடரும் நேரிடாது" என்று செய்தியனுப்பினர்.

அச்செய்தி கேட்டு வாஸ்கோ வருத்தமடைந்தார். அரசர்க்குத் தம்மிடம் இருந்த நம்பிக்கை குறைந்த தென்று அவருக்கு நன்கு விளங்கியது. வாஸ்கோ அரசருடைய நம்பிக்கை பெற்று நலமான வாணிபஏற்பாடுகள் செய்துகொள்வதில் யாதொரு தடையும் உண்டாகா தென்று உறுதியாக எண்ணிக்கொண்டிருந்தார். அந்த எண்ணத்தை அப்போது கைவிட வேண்டிய தாயிற்று. ஆயினும், அரசருடைய உள்ள நிலையை ஆழச் சோதித்து அதற் கேற்பப் பக்குவமாக நடந்துகொண்டு அரசருடைய மனநிலையை மாற்றவேண்டுமென முடிவு செய்துகொண்டார். அரசர் மனத்தைத் திருப்பி எப்படியாவது அவரைத் தம்வழிக்குக்

கொண்டுவருவது இன்றியமையாததென்று உணர்ந்தார். அவ்வாறு செய்யாவிட்டால் இந்தியப்பொருள்களை வாங்கிவைத்துக்கொள்ள அவருக்கு எவ்வாறு முடியும்! தம்முடைய முயற்சியில் தாம் வெற்றி பெற்றதற்கு என்ன அடையாளம் இமானுவேல் அரசருக்குக் காட்டுவார் வாஸ்கோட காமா.

வாஸ்கோவின் ஆட்களுள் [1]அரபி, [2]ஹீப்ரு என்னும் இருமொழிகளும் பேசத் தெரிந்த [3]ஜோன் நியூன்ஃஸ் என்னும் ஒருவன் இருந்தான். அவனைத் திவானியுடன் கள்ளிக்கோட்டைக்கு அனுப்பி வைக்கலா மென்றெண்ணி வாஸ்கோ அவனை அழைத்து "நீ திவானியுடன் நகருக்குப் போக வேண்டும். அங்கு எல்லாவற்றையும் உற்று நோக்கி வரவேண்டும். அங்கு மக்கள் என்னென்ன சொல்லிக்கொள்ளுகிறார்கள் என்று அறியவேண்டும். அவர்கள் ஏதாவது கேட்டால் அதற்கு அளவாய் எச்சரிக்கையுடன் மறுமொழி பகரவேண்டும். நீ திவானியை விட்டுப் பிரிந்து எங்கும் போய்விடக் கூடாது. அவனுடனேயே நீ எப்போதும் இருக்க வேண்டும்; நான் உன்னிடம் பணமும் கொடுத்து வைக்கின்றேன். வாங்க வேண்டிய பொருள்களின் பட்டியும் கொடுக்கின்றேன். அவைகளைத் தவிர நீ வேறொன்றும் வாங்கவேண்டாம்; ஆனல் கடைகளில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன என்பதை மாத்திரம் குறித்துக்கொண்டு வா" என்று அவனுக்கு எச்சரிக்கை செய்தார்.

1. Arabic. 2. Hebrew. 3. Joan Neunz.

மறுநாட் காலை ஜோனும் திவானியும் ஒரு படகி லேறிக் கரை வந்து சேர்ந்தனர்.

---

10. எதிர்பாராத இணக்கம்

ஜோனும் திவானியும் துறை மேடைக்குச் சென்றவுடனேயே ஊரார் அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் எந்த வெள்ளைக்காரரை யும் அதுவரையிற் பார்த்ததில்லை, யாதலால் ஜோனைக் கண்டவுடனே அவனை நெருங்கிக் கூட்ட மாக வந்து சேர்ந்தார்கள்.

திவானி தன்னாற் கூடியவரையில் விரைந்து சென்று கோஸிலில் அமைச்சன் வீட்டை யடைந் தான். அமைச்சன் அவர்களை அன்போடு வர வேற்று, அவர்கள் விரும்பியபடி நகரில் சுற்றி வரலா மென்று தாராளமாய் விடை கொடுத்தது மன்றி நகர மக்கள் இவர்களை நெருக்கி மேல் விழாத படி செய்யத் தன் ஆட்களில் ஒருவனையும் உடன் அனுப்பி வைத்தான்.

அவர்கள் தெருக்களைச் சுற்றி வரும்பொழுது அராபிய வணிகர்களிற் சிலர் அவர்களைக் கண்ட னர். கண்டவர்கள் உடனே அமைச்சன் வீட்டுக்குப் போய் அவனிடம் "நியூன்ஸ்சையும் திவானியையும் இன்றிரவு இந்நகரிலேயே நிறுத்திவிடவேண்டும். அவர்கள்மேற் குற்றஞ் சாட்ட அவர்கள் பேச்சில்

ஏதாவது காணக்கூடுமா வென்று பார்க்கவேண்டும்'' என்று சொல்லி, அதற்கு அவனை இசையச் செய்தனர்.

ஜோனும் திவானியும் ஒரு நீண்ட தெருவில் ஓய்ந்தாற்போல் கடைகளைப் பார்த்துக்கொண்டே நடந்து சென்றனர். அக்கடைகளில் காணப்பட்ட தந்தங்கள் பவழங்கள் முதலியவற்றைக் கண்டு கண்கொட்டாமல் ஏறிட்டுப் பார்த்துக்கொண்டே நடந்து போனார்கள். அத் தெருவில் ஓரிடத்தில் ஒரு மனிதனைத் தங்கள் எதிரே கண்டார்கள். அவன் ஜோனையே உற்று நோக்கிக்கொண்டு வந்து எதிரில் நின்று ஜோன் வியப்படையும்படி அவனைப் பார்த்து ஸ்பெயின் மொழியில் ''நீ எங்கே போகின்றாய்?'' என்று கேட்டான்.

ஜோன் :—இன்றிரவு கோஸிஃல் வீட்டில் தங்கியிருக்கச் செல்கின்றோம்.

வந்தவன் :—அப்படிச் செய்யவேண்டா மென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்; என்னோடுகூட என் வீட்டுக்கு வாருங்கள்.

உடன் வந்த கோஸிஃயின் வேலைக்காரன் இதை ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையால் இருவரும் மறுபடியும் அமைச்சன் வீட்டுக்குச் சென்று அவன் உத்தரவு பெற்று ஸ்பெயின் மொழியில். பேசி விருந்துக்கு அழைத்தவன் வீட்டுக்குச் சென்றார்கள்; அங்குச் சிறந்த உணவையும் உண்டார்கள்.

பிறகு அவன் அவர்கள் வரலாற்றை முற்றும் கேட்டறிந்துகொண்டு தன் வரலாற்றைச் சொல்ல

லாயினன். அஃதாவது:—"யான் ஸ்பெயின் நாட்டான். செவில் நகரைச் சேர்ந்தவன். நான் ஒரு சிறுபையனு யிருந்தபோது மூரர்கள் என்னைப் பிடித்துக்கொண்டு ஆசியா வந்துவிட்டார்கள். நான் அவர்களிட மிருந்து தப்பித்துக்கொண்டு எங்கெங்கோ திரிந்து, இறுதியில் இக்கள்ளிக்கோட்டை வந்து சேர்ந்தேன். என்னுயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒரு மூரன் மாதிரி நடந்துகொண்டிருந்தேன்" என்பதாம். இதனைக் கேட்ட ஜோன் அம் மனிதனைப் பார்த்து, "நீர் நாளைக் காலையில் எங்கள் கப்பலுக்கு எங்களுடன் வாரும், எங்கள் மாலுமி வாஸ்கோட காமா உம்மைக் களிப்புடன் நன்கு ஏற்றுக் கொள்ளுவார்" என்றான்.

[1] **மான்சேடி** என்னும் பெயர் கொண்ட அம்மனிதன் அவ்வழைப்புக்கு இணங்கினன். பொழுது விடிந்ததும் அமைச்சனிடம் விடை பெற்றுக் கொண்டு மூவரும் படகேறி மறுபடியும் **ரபேல்** கப்பல் போய்ச் சேர்ந்தார்கள்.

மான்சேடி கப்பல் மேற்றட்டுக்கு வந்ததும், ஆங்கிருந்த வாஸ்கோவையும், பாலோவையுங் கண்டு, தலை மிகத் தாழ வணங்கி ஆவலோடு உரத்த குரல் கொண்டு ஸ்பெயின் மொழியில் "பெரியீர்! நல்ல வாய்ப்பு, நல்ல வாய்ப்பு மட்டற்ற மாணிக்கங்கள்! மட்டற்ற மரகதங்கள் உங்களை இங்கே கொண்டு வந்ததற்காகக் கடவுளுக்கு வாழ்த்துக் கூறி அவரை வணங்கவேண்டும்! இவையே யன்றி கறி

1. Mansedi.

மணப் பொருள்கள் எவ்வளவோ! ஏனைய செல்வப் பொருள்கள் எவ்வளவோ!'' என்று கூறினன்.

ஸ்பெயின் மொழி கேட்டதும் காமா வெகு வியப்படைந்தார். தங்கள் பேச்சு மொழியை வேற்ருன் ஒருவன் பேசக் கேட்டு மற்றவர்களெல்லோரும் மேற்றட்டுக்கு ஓடிவந்து அவனைப் பார்த்து அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே யில்லை.

சிறிது நேரத்துக்கெல்லாம் மான்சேடி மாலுமிகளுக்கும் மற்றவர்களுக்கும் மிகவும் நண்பனுகிவிட்டான். வாஸ்கோ அவனைத் தம்மருகில் இருக்கச் செய்து அவன் வரலாற்றையெல்லாம் கேட்டறிந்தார். பிறகு ஜோன், மான்சேடி, காமா மூவரும் ஒருங்கே உண்டார்கள்.

பின்னர் வாஸ்கோ தம் வரலாற்றை அவனுக்குச் சொல்லித் தாம் கள்ளிக்கோட்டைக்கு வந்த காரணத்தையும் தெரிவித்து அந்நாட்டரசர் தம்மிடம் நட்புப்பூண்டு நல்லது செய்வாரா வென்றும் அவனைக் கேட்டார். மான்சேடி உடனே மனக் கலக்கமடைந்து முக வாட்டமுற்றுச் சிறிதுநேரம் ஒன்றும் பேசாமலே யிருந்து இறுதியாக வருத்தத்துடன் "மாலுமியே! கேட்பாயாக! நான் இப்போது உண்மையைச் சொல்லவேண்டியவனுக இருக்கின்றேன். வஞ்சனை கொண்ட மனத்துடனேயே நான் முதன் முதல் இக் கப்பலில் கால்வைத்தேறினேன். உனக்குப் பகையாளிகளாய் ஏற்பட்டிருக்கின்ற அராபியர்களிடமிருந்து ஒரு ஒற்றனுக உளவறிந்து போய் அவர்களுக்குச் சொல்லவே யான் இங்கு வந்

தது. ஆனல் இப்போதோ யான் உன் அன்புக்கு அடிமையாய்விட்டேன். இனிமேல் நான் உனக்கு உண்மை நண்பனே! அராபிய வணிகர்கள் உங்கள் மீது பொருமையும் அதனல் பகையும் கொண்டுவிட்டார்கள். உங்கள் வரவால் தங்களுக்குக் கேடு விளையுமென் றெண்ணி உங்களை விரட்டி யனுப்பி விடவேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்கின்றனர். அரசருக்கு உங்களிடம் பகைமை யுண்டாக்கத் துணை செய்யச் செல்வ அமைச்சனையும் கைக்கூலி மிகக் கொடுத்துத் தங்கள் கையில் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். உங்களிடம் வந்து அன்புடன் நடித்து உளவறிந்து செய்திகளை அவர்களுக்குத் தெரிவிக்கக் கைக்கூலியாசை காட்டி என்னையும் இங்கு அனுப்பி வைத்திருக்கின்றனர். நான் என் ஆட்களை அழைத்து விருந்தளித்ததும் இப்போது இங்கு வந்ததும் அவர்களுடைய தூண்டுதலினலே தான். மாலுமியே! இப்போது யான் உங்களுக்குச் செய்ய வேண்டியதென்ன சொல்லும். எதையும் உண்மைப் பற்றுக் கொண்டே செய்து முடிப்பேன்'' என்று சொல்லி முடித்தான்.

வாஸ்கோ மான்சேடியின் சொற்களை ஏற்றுக் கொண்டு அவனுக்குப் பச்சைக்கோடி யொன்றளித்து, “நீ இப்போது எங்களிடம் கொண்டுள்ள அன்பு குறைவின்றி மிகுமானல், இன்னும் உயர்ந்த பரிசுகளெல்லாம் உனக்குக் கிடைக்கும்'' என்ருர்.

காமா கள்ளிக்கோட்டைச் செய்திகளை யெல்லாம் கருத்தில் ஊன்ற எண்ணி எண்ணி மனத்தில் இருத்திக்கொண்டார். வருவது வரட்டும் செய்வ

தைச் செய்வோம் எனத் துணிந்தார். சாமொரின் அரசர் தம்மை வரவழைத்தால் தாம் அவரிடம் அஞ் சாமற் போய்த் தம்மை ஒப்படைத்துக்கொள்ளப் போவதாக மற்ற மாலுமிகளிடம் சொன்னார். அவர் கள் வாஸ்கோவுக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டுவிட் டால் தங்கள் நிலை என்னு மென்று எண்ணி மனங் கலங்கி அவரை நோக்கி, "தலைவரே! இஃது எங் களுக்கு நன்மையாகத் தோன்றவில்லை. வேறொரு வரை அனுப்பிவைத்து அரசருடன் உடன்படிக்கை செய்து கொள்ளலாமே" என்று சொன்னார்கள்.

---

11. கடாஅ உருவொடு கண்ணஞ்சா ·தியாண்டும் உகாஅமை வல்லதே ஒற்று.

கரையேறிக் கள்ளிக்கோட்டைக் காவலனைக் கண்டு கலந்து பேசவேண்டியவற்றை யெல்லாம் முன்னுடியே ஓர்ந்துகொண்டார் வாஸ்கோ. அரச ருக்குச் செலுத்தவேண்டிய காணிக்கைகளைத் திரட் டும்படி கட்டளை யிட்டார். அவர் தம் ஆட்களில் பன் னிருவரைத் தெரிந்தெடுத்துத் தம்முடன் அரசர் அத்தாணி மண்டபத்துக்கு வர ஏற்பாடு செய்தார். அவர்கள் அணிந்துகொள்ளச் சிறந்த உடையுடுப் புகளை அவர்களுக்குத் தந்தார். சாமொரினுக்கு அளிக்க அவர் வைத்திருந்த பொருள்கள் அருவள மும் பெரு வியப்புங் கொண்டவை. அவையாவன: செந்நிறக் கோடிகள், மஹமல் பட்டுக்கள், மஞ்சட்

பட்டுத்துணிகள், சரிகைச் சித்திரவேலை செய்த பட்டுத்துணியால் மூடப்பட்டதும் ஒளி மிக்க வெள்ளி ஆணிகள் பதிக்கப்பெற்ற சரிகைச் சித்திரவேலை செய்த பட்டு உறையிட்ட வனப்புவாய்ந்த நாற்காலி ஒன்று. ஓரங்களில் பொன்னூற் குஞ்சங்கள் அமைந்த செம்பட்டுறையிட்ட திண்டுகள் இரண்டு, சித்திரங்கள் செதுக்கித் தங்கம் பூசிய வட்டில் கூசாக்கள், மூலாம் பூசிய முகம் பார்க்கும் பெரிய கண்ணுடி ஒன்று, செம்பட்டுப் பொத்தான்களும் குஞ்சங்களும் கொண்ட செந்நிறத் தொப்பிகள் ஐம்பது; உறையிட்ட கத்திகள் ஐம்பது, இன்னும் பல.

பன்னிரண்டு மெய்காப்பாளர்களுடன் அரச வரிசைப் பொருள்களையும் ஏற்றிக்கொண்டு காமா, கேப்ரியல் கப்பலிலிருந்து ரபேல் கப்பலில் புறப்பட்டார். அது துறையில் கூட்டமா யிருந்த மக்களுக்கு ஒரு புதுமைக் காட்சியா யிருந்தது. மேலும் கப்பல் முன்னும் பின்னும் கொடிகள் பறந்துகொண் டிருந்தன. இருபுறங்களிலும் பீரங்கிகள் அமைக்கப்பட்டிருந்தன. மாலுமியின் மெய்காவலரும் அணிந்து கொண்டிருந்த உடை உடுப்புக்கள் பகல் வெயிலில் நன்கு மிளிர்ந்தன. அரசவைக்குச் செல்வதற்கு ஏற்ற உடையுடுப்புக்களையே வாஸ்கோ அணிந்து கொண்டிருந்தார். நீலப்பட்டாலான உட்சட்டையும் வெள்ளைப் பீங்கான் பூசிய கழுத்துப் பட்டையும் அணிந்திருந்தார். பொற் கைப்பிடி கொண்ட சரிகையோடு கூடிய ஒரு வளப்பமான கச்சுப் பட்டை இடுப்பில் கட்டிக்கொண் டிருந்தார். சித்திர வேலை செய்த மஞ்சட் பட்டாடை ஒன்றை குதிக்

கால் மறைய மேலணிந்துகொண் டிருந்தார். தலை யில் நீண்ட வெள்ளிறகு அமைந்த நீல மஹமல் பட் டாலான ஒரு தொப்பி, காலடிகளிலோ வெள்ளைத் தோற்காப்புகள், இத்தகைய உடை யுடுப்புகளுடன் வாஸ்கோ புறப்பட்டார். அங்கிருந்து அரண்மனை செல்ல ஓர் ஊர்வலம் ஏற்பாடாயிற்று. கையாளாக அழகிய இளமகன் ஒருவன் செம்பட் டுடுத்து வாஸ்கோ அருகில் நடந்தான். மெய்காவலர்கள் பன்னிருவரும் அரச வரிசைகளை ஏந்திக்கொண்டு ஒருவர்பின் ஒருவராக அவருக்கு முன்னே சென்ற னர். அவர்கள் எல்லாருக்கும் முன் நடந்தவன் அவ் வரிசைகளிற் சிறந்ததாகிய நாற்காலியை ஏந்திச் சென்றான். இருநூறு பேர் கொண்ட நாயர் பட்டா ளம் ஒன்று போர்த்துக்கேசியர் இருபக்கங்களிலும் பிரிந்து சென்றது. சாமொரின் மெய்காவலர் தலை வனே அப் பட்டாளத்துத் தலைவனாய் அதனை நடத்தினன்.

ஊர்வலக் கூட்டத்தின் முன்னணியில் போர்த்துக்கேசியர் பலர் எக்காளம் ஊதிக்கொண்டு போயினர். ஊர்வலம் புறப்பட்டபோது, கட லோரம் தங்கி யிருந்த கப்பலிலிருந்து பீரங்கிகள் வெடித்தன.

வாஸ்கோ தெருக்கள் வழியே நடந்து போன போது வீடுகளின் வாயிலிலும் புலகணிகளிலும் தளங்களின் மீதும் மக்கள் கூடி ஊர்வலத்தைப் பார்த்துக்கொண் டிருந்தனர். அப்போது வாஸ்கோ பெருங்குரலெடுத்து "நமக்கு இங்கு எவ்வளவு சிறப் புக்கள் நடக்கின்றன வென்று நமது போர்த்து

கலில் இருக்கும் மக்கள் அறியார்களல்லவா?" என்றார்.

ஊர்வலம் கோமகன் அரண்மனை அணுக மிருந்த நேரமாயிற்று. அவ்வரண்மனையோ கண் கவரும் அழகு மிக்க காட்சியைத் தந்தது. அழகாக வெட்டி விடப்பட்ட அடர் சிறு செடிகள் அம்மாளி கையைச் சூழ்ந்து பச்சைக் காப்புச் சுவர்போலக் கண்ணுக்குக் குளிர்ச்சியளித்தன. அவற்றை யடுத்து மலர் நிறைந்த பூங்காவும் நீரூற்றுக்களும் அகத்தை யும் முகத்தையும் மகிழச் செய்தன.

மாலுமியை வரவேற்று அரசரிடம் அழைத்துக் கொண்டு போகப் பெரியார் பலர் அரண்மனை வெளிவாயிலில் வாஸ்கோவின் வரவு நோக்கி இருந் தனர். அப்பெரியார்களுடைய தலைவரான நெறித் தலைவர் வந்து வாஸ்கோவை ஆர்வத்தோடு மார் போ டணைத்துக்கொண்டு வரவேற்றார். அவர் வாஸ்கோவையும் உடன் சென்றோரையும் அரண் மனை முன் மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார். பிறகு அவர் அவர்களை வளைவாயில்களின் வழியாக நாயர்களால் காவல் செய்யப்பட்ட நான்கு அவை மண்டபங்களுக்கப்பால் அழைத்துக்கொண்டுபோய் ஒரு பெருங் கூடத்தை அடைந்தார். அங்கு விசுப் பலகைகள் அரை வட்டமாக அமைக்கப் பட்டிருந்தன. தரையில் பச்சை இரத்தினக் கம் பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. சுவர்ப் பக்கங் களில் பட்டுத் துணிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மெத்தையின் முகப்பில் பீதாம்பரத்தாலும் வெண் பட்டாலும் மூடப்பட்ட ஒரு சாய்வு நாற்காலியில்

அரசர் வீற்றிருந்தார். அவர் மாணிக்கங்கள் பதித்துப் பளபளத்த ஒரு வயிர முடியைத் தலையில் அணிந்திருந்தார்.

வாஸ்கோ கூடத்தின் வழியே நடந்துபோய் சாமொரின் எதிரே நின்று மும்முறை குனிந்து வணங்கிக் கைகூப்பி நின்றார். அரசர் வாஸ்கோவுக்கு ஒரு இருக்கையைச் சுட்டிக் காட்டி அதில் இருக்கும்படி அவருக்குக் குறிப்பிட்டார். அப்போது நாயர்கள் மற்றப் பரிவாரங்களை விசுப்பலகைகளில் உட்காரச் செய்தனர். பிறகு அரண்மனை ஆட்கள் வட்டில்களில் நீர் கொணர்ந்து வந்தவர்களைக் கை கழுவிக்கொள்ளச் செய்து சிற்றுண்டியாக பலவித பழங்களை அவர்களுக்குப் பரிமாறினர்.

சிற்றுணவு உட்கொண்ட பிறகு வாஸ்கோ கொண்டுவந்த காணிக்கைப் பொருள்களெல்லாம் காவலன் முன் வைக்கப்பட்டன. விலையுயர்ந்த துணிகள், கூஜாக்கள், வட்டில்கள், உருக்காட்டிக் கண்ணாடி, நாற்காலி அவை ஒவ்வொன்றும் ஒன்றன் பின் ஒன்றாய்க் கொண்டு வரப்பட்டபோதெல்லாம் அரசர் மட்டற்ற மகிழ்வுடன் திறந்த கண்ணும் வாயும் மூடாமல் உற்று நோக்கிக்கொண்டிருந்தார். வாஸ்கோ இரு மொழியாளர் மூலம் தாம் கொண்டுவந் தளித்த நாற்காலியில் அரசரை அமர்ந்திருக்கக் கேட்டுக்கொள்ள அவர் மனமுவந்து அவ்வாறே செய்து மகிழ்ந்தார்.

சாமொரின் வாஸ்கோவை நோக்கி, "நீங்கள் இங்கு வந்த காரணத்தை எமது அவைக்களத்தா

ரிடம் சொல்லுங்கள்" என்ன, வாஸ்கோ, "அரசே, எங்கள் அரசர் அதைத் தங்களிடமே தனித்துச் சொல்லும்படி கட்டளையிட் டனுப்பினர்" என்ருர். உடனே அரசர் வாஸ்கோவையும், பெரியார் சிலரையும், நியூன்ஃஸ், திவானி இவர்களையும் அழைத்துக் கொண்டு தமது சமயத்தலைவருடன் ஓர் உள்ளறைக்குச் சென்ருர். எல்லோரும் அவரவர்கள் இருக்கைகளில் அமர்ந்தபின் வாஸ்கோ, அரசரை நோக்கி:

"அரசரேறே! இந்நாட்டு அரசர்களில் தாங்கள் உயர்ந்தவரும் வல்லவருமா யிருக்கின்றீர்கள். தங்கள் சீரையும் சிறப்பையும் கேள்வியுற்றிருக்கும் எம் அரசர் தங்கள் நட்பையும் உறவையும் பெற மிக விரும்புகின்ருர். எங்கள் நாட்டுப் பொருள்களுடன் கப்பல்களை அனுப்பி வைத்து அவற்றை இங்கே பண்டமாற்றி இந்நாட்டுப் பொருள்களில் முதன்மையாய் மிளகையும்மருந்துப் பொருள்களையும் பெற்று வாணிபஞ்செய்ய மிகவும் விரும்புகின்றனர். அந்த உயர்ந்த நோக்கத்துடன் இப்பொருள்களாகிய காணிக்கையை என்னிடம் அனுப்பி வைத்து அவற்றைத் தங்களிடம் சேர்ப்பிக்குமாறு ஆணையிட் டனுப்பினர் எங்கள் இறைவராகிய இமானுவேல். எல்லாம் வல்ல இறைவனருளால் ஓர் ஊறுபாடு மின்றி உங்களை வந்து காணலாயினேன். நீங்கள் எங்கள் வேண்டுகோளை ஏற்ருல் நாங்கள் எங்கள் நாடு திரும்பி உங்களுடைய அருஞ்செயல்களை யெல்லாம் பலரறியச் செய்வோம். பிறகு அங்கிருந்து வாணிபக் கப்பல்கள் வரவும், இங்குள்ள பொருள்களை ஆங்குக் கொண்டு போகவும் கள்ளிக்கோட்டை

வாணிபம் எந்நாளும் மிக்க சிறப்பாக நடந்தேறும்" என்று சொல்லி முடித்தார்.

அவர் கூற்றைக் கேட்ட சாமொரின் "உங்களுக்கு இங்குள்ள பொருள்களில் என்னென்ன வேண்டுமோ அவற்றையெல்லாம் கொண்டுபோய் உங்கள் கப்பல்களில் சேர்த்துக் கொள்ளலாம். மேலும் உங்கள் மக்களெல்லாம் இந்நகரில் எங்கு வேண்டுமானாலும் களிப்புடன் உலாவலாம்; அவர்களுக்கு எவ்வித ஊறுபாடும் ஏற்படாது" என்று பகர்ந்தார்.

பிறகு சாமொரின் வாஸ்கோவினுடைய கடற் பயணம்பற்றியும் அதில் நேர்ந்த இடுக்கண்களைப்பற்றியும் போர்த்துக்கல் நாட்டு வளப்பங்களைப்பற்றியும் அந்நாட்டு அரசரைப் பற்றியும் பற்பல கேள்விகள் கேட்டார். அவற்றிற்கெல்லாம் வாஸ்கோ தக்க மறுமொழி கூறி, "இந்தியாவுக்கு ஒரு கடல் வழி கண்டு பிடிக்கவும் உம்முடைய உறவைப் பெறவுமே இக்கப்பல்களுடன் இமானுவேல் அரசர் என்னை இங்கு அனுப்பி வைத்தார். அவர் நோக்கம் நிறைவேறாமல் நான் திரும்பக் கூடாது என்று கடுங் கட்டளையிட் டிருக்கின்றார். அக்கட்டளைகளை நிறைவேற்றாமல் நான் நாடு திரும்புவேனாயின் நான் உயிருடன் வாழ முடியாது" என்று சொல்லித் தம் இருக்கையில் அமர்ந்தார்.

பொழுது போய்விட்டபடியால் அரசர் வாஸ்கோவுக்கு விடை கொடுத்து மெய் காப்பாளர்களுடன் திரும்பிப் போகக் கட்டளையிட்டார். வாஸ்கோவும் தோழர்களும் தெருக்களில் நடந்து வருகை

யில் மழை பெய்யத் தொடங்கியது. விலையுயர்ந்த உடைகளெல்லாம் வீணாய்ப் போகும்போலத் தோன்றியது. வாஸ்கோவை முதுகில் தூக்கிக்கொண்டு போகும்படி நியூன்ஸ் சிலருக்குச் சொல்லியும் வாஸ்கோ அதற்கு உடன்படவில்லை. வாஸ்கோ மழையில் நடந்தே சென்று பொருட் களஞ்சியத்துக்கு வந்தார். அங்கு நனைந்த உடுப்புக்களைக் களைந்துவிட்டு வேறு நல்லுடை அணிந்துகொண்டார். அதன்பிறகு வாஸ்கோ ஆங்கோ ரிடத்திலமர்ந்து தாம் அரசரைக் கண்டு பேசிய செய்தியையும் மற்ற நகர நிகழ்ச்சிகளையும் பற்றிப் பாலோவுக்கு ஒரு கடித மெழுதி யனுப்பிவைத்தார்.

12. பொறாமைப் பேய்களின் பொல்லாச் செயல்கள்

மறுநாள் பொன் பூப்போட்ட பல பொருள்களுடனும் கஸ்தூரி நிறைந்த ஒரு ஜாடியுடனும் மற்றும் சில விந்தைப் பொருள்களுடனும் பண்டார அலுவலாளன் வாஸ்கோவிடம் வந்து அப்பொருள்களை யெல்லாம் அவரிடம் கொடுத்து அவை அரசரால் வாஸ்கோவுக்கு நன்கொடையாக அனுப்பப்பட்டவை என்று சொன்னான். மேலும் போர்த்துக்கேசியர் தங்கி யிருக்கத் தகுதியாக அப்பண்டசாலையைச் செப்பனிடும்படி அரசர் இட்ட கட்டளையையும் யாவருக்கும் அறிவித்தான்.

உடனே அகன்ற கொட்டகை யொன்று போடப்பட்டது. வணிகர்கள் வந்து அமர்ந்து பண்ட மாற்றுவதற்கென்று விசுப்பலகைகளும் அக் கொட்டகையில் அங்கங்கே போடப்பட்டன. வணிகர்கள் மிக சுறுசுறுப்போடும் அக்கரையோடும் பண்ட மாற்றுவதைப் பார்த்து வாஸ்கோ ஆவலும் மன நிறைவுங் கொண்டார். பகலெல்லாம் பண்ட மாற்றுவார்கள். மாலையில் மணப்பொருள்களையும் மருந்துப் பொருள்களையும் படகுகளிற் கப்பலுக்குக் கொண்டு போவார்கள். சூரியன் பட்டதும் பணம் கொடுக்கப்படும்.

செல்வ அமைச்சனும் நெறிமுறை அமைச்சனும் அரசவையில் செல்வாக்கு மிகுந்தவர்கள் என்பதை வாஸ்கோ அறிவார். அவர்கள் தம்மிடம் பகை பாராட்ட அரபி வணிகர்கள் செய்த முயற்சியையும் அவர் அறிவார். ஆகையால் அவ்வலுவலாளர்க்கு வாஸ்கோ பட்டுத் துணிகளும், சிறு கத்திகளும், தொப்பிகளும் அழகிய கயிறுகளும் பவழக் கிளைகளும் நன்கொடையாகக் கொடுத்தார். தெரிந்தோ தெரியாமலோ கோஸலேலுக்குக் கொடுத்ததைவிட மிகுதியான பொருள்களை நிதியாளனுக்குக் கொடுத்துவிட்டார் வாஸ்கோ. இந்நிகழ்ச்சி கோஸலேலுக்குச் சினமூட்டியது. ஆகையால் அவன் அரபி வணிகர்களோடு இணக்கம் மிக்கவனானான்.

அரசர் போர்த்துக்கேசியரிடம் நட்பும் உறவும் கொண்டவரா யிருப்பதைக் கண்டு அராபியர் திகைப்படைந்தனர். அவர்கள் தம் மனம் போல்

வாணிபம் நடத்துவதற்கு அரசர் விட்டுவிட்டாரே யென்று பொறாமை கொண்டனர். தாங்கள் செய்த முயற்சிகள் வீண் போயினவே என்றும் வருந்தினர். தங்கள் வாணிபமே அழிந்து போய்விடுமென்றும் அங்கலாய்த்தனர். ஆகையால், அரபி வணிகர்கள் எல்லோரும் பெருங் கூட்டமாகக் கூடி வேண்டிய முயற்சிகளெல்லாஞ் செய்து நகர் எங்குமே போர்த்துக்கேசியர் மீது பகை யுண்டாக்கிவிட வேண்டுமென்று எல்லோரும் ஒரே முடிவு செய்தார்கள்.

அரபி வணிகர்கள் கோஸஃல் அமைச்சனுக்கு அளவு கடந்த பொருள் கொடுத்தார்கள். வாஸ்கோட காமாவுக்குப் பாதுகாப்பாகத் தன் மெய்காப்பாளர் தலைவனை சாஃமொரின் ஏற்பாடு செய்து வைத்தாரல்லவா! அவனிடமும் இவ்வணிகர்கள் சென்று மறைவாகப் பேசி மட்டற்ற பணம் கொடுத்தனர். போர்த்துக்கேசியருக்கு அரசர் மேல் சினம் மூட்டி அவருக்குப் பகையாக அவர்கள் ஏதாவது செய்யத் தூண்டும்படி ஏற்பாடு செய்தனர். அவ்வாறு செய்தால் அரசர் அவர்களை வெறுத்து அவர்களைக் கொலை செய்வதன்றி அவர்களுடைய கப்பல்களையும் பிடித்துக்கொள்வார் என்பது அவர்களுடைய நினைப்பு.

மெய்காப்பாளர் தலைவன் வறியவன். ஆகையால் மற்ற அலுவலாளர்களைவிட செல்வ வெறி மிகுந்தவன். ஆகவே அரபி வணிகருடைய வேண்டுகோளுக்கு அவன் உடன்பட்டான். ஆனாலும் சாஃமொரின் அரசருடைய சீற்றத்துக்காளாகித் தன் தலையை யிழந்துவிட நேருமோ

வென்றும் அவன் அஞ்சினன். ஆதலால் அவன் போர்த்துக்கேசியருக்கு வெளிப்படையாக ஒருவித ஊறுபாடுஞ் செய்வதற்கில்லை. "அரசர்க்கு எதிராக ஏதாவதொன்றைச் செய்ய வாஸ்கோவைத் தூண்ட வேண்டும். அதன் வழியாக அவருக்கு இன்னல் விளைவிக்கவேண்டும். இவ்வளவும் நாம் செய்தோமென்று அரசருக்காவது வாஸ்கோவுக்காவது தெரியக் கூடாது. அவ்வாறு செய்தோமானல் நாம் தப்பலாம்" என்று அவன் எண்ணி முடிவு செய்தான்.

வாஸ்கோ அரசரைக் கண்டு பேசிய இரண்டொரு நாட்களில் மெய்காப்பாளர் தலைவன் ஒரு பல்லக்கில் ஏறிப் பண்டசாலை வந்து வாஸ்கோவைக் கண்டு சாமொரின் தம் நாட்டுப்புற மாளிகைக்குப் போகிருரென்றும் புறப்படுமுன் வாஸ்கோ தம்மை வந்து காணவேண்டுமென்றும் அவர் கட்டளையிட்டதாகத் தெரிவித்தான். வாஸ்கோ முன்னெச்சரிக்கையுள்ளவராயினும் அச்சொல்லை நம்பி அவனேடு செல்ல உடன்பட்டார். தன் சூழ்ச்சி அரசருக்குத் தெரியாமலிருக்க வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் காப்பாளர் தலைவன் முன்னதாகச் செய்து வைத்துவிட்டான்.

தாம் அரசனைப் பார்க்கப் போவதாகவே எண்ணி நியூன்ஸைக் கூப்பிட்டு, "நல்லதோ கெட்டதோ என்ன பொருள்கள் விற்பனைக்கு வந்தாலும் வாங்கிக்கொள்ளுங்கள்; மேலும் அவை என்ன விலையானலும் மறுக்காமற் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று வாஸ்கோ சொன்னர். அதன்

பிறகு அவர் சிவப்பு நிறங்கொண்ட பட்டு உட்சட்டையும் அங்கியும் தொப்பியும் அணிந்துகொண்டார். தம் உடனாட்களாக எட்டுப் பேர்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டார். அவர்கள் மயிர்ச்சட்டை உடுத்துக் கையில் தடிகளைத் தாங்கிக் கொண்டார்கள்.

காப்பாளர் தலைவன், வாஸ்கோவை ஏற்றிச் செல்ல ஒரு பட்டுப் பல்லக்குக் கொண்டுவந்தான். அது புட்டாக்கள் போட்டுப் பட்டுக் குஞ்சங்கள் தொங்கவிடப்பட்டிருந்தது. பல்லக்கில் படுத்துக் கொள்ள மெத்தை தலையணைகளும் இருந்தன. வாஸ்கோ பல்லக்கிலேறி மெத்தையின் மீது சாய்ந்துகொண்டார். அவ்வாறு பண்டசாலையி லிருந்து பல்லக்குப் புறப்பட்டது.

நடுப்பகல் வேளையில் பல்லக்கு ஒரு சிற்றூற்றங் கரைக்கு வந்து சேர்ந்தது. ஆற்றின் கரையோரத்தில் இரண்டு பெரிய படகுகள் இருந்தன. அங்கு நாயர் ஒருவன் வாஸ்கோட காமாவையும் அவருடன் வந்தவர்கள் மூன்று பேரையும் முதற் படகில் ஏறிக் கொள்ளக் கட்டளையிட்டான். அம்மூவருள் ஒருவன் நியூன்ஸ். மற்ற ஐவரும் பின் படகில் தள்ளப்பட்டார்கள். இரண்டு படகுகளையும் நாயர்கள் விரைந்து தள்ளிக்கொண்டு போனார்கள்.

படகுகள் ஆற்றில் செல்லும்போது இருபக்கங்களிலும் பல சிற்றூர்களைக் கண்டார்கள். கரையோரத்தில் அங்கங்கே மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து படகுகளை வியப்போடு பார்த்துக்கொண்

டிருந்தனர். சிற்சிலவிடங்களில் கரையோரமாகப் புதர்களும் வெளியிடங்களும் காணப்பட்டன. அவ்வாறு செல்லும்போது வாஸ்கோ சென்ற படகு பின் வந்த படகை விட்டுப் பிரிந்து கண்ணுக்கெட்டாத தொலை விரைந்து போய்விட்டது. தம் துணைவரை விட்டுத் தம்மைப் பிரித்ததுபற்றி வாஸ்கோ சினந்தாராயினும் நாயர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை.

வாஸ்கோவின் படகு சில குடிசைகள் இருந்த ஒரு சிற்றூரருகில் நின்றது. ஆனாலும் வாஸ்கோவையும் அவருடனிருந்தவர்களையும் நாயர்கள் கரையிற் செல்ல விடவில்லை. படகிலிருத்தியே அவர்களுக்குக் கஞ்சி கொடுத்தார்கள். தமக்கு அவர்கள் விளைத்த கொடுமையினாற் சினங்கொண்ட வாஸ்கோ கஞ்சியை உட்கொள்ள மறுத்தார்.

படகு பின்னும் பறந்தது. இருட்டும் வரையில் அஃது எங்கும் நிற்கவில்லை. இருட்டானதும் படகு ஓரிடத்தில் நின்றது. கைதிகளாக்கப்பட்ட வாஸ்கோவும் உடனாளிகளும் அன்றிரவு கரைக்குக் கொண்டு போகப்பட்டார்கள். பிறகு அங்கிருந்த ஒரு சிறு வீட்டில் அடைத்து வைக்கப்பட்டனர். பொழுது விடியுமுன்னர் நாயர் ஒருவன் வாஸ்கோவை எழுப்பி, "ஐயா காப்பாளர் தலைவர் வந்துவிட்டார். உம்மைப் பார்க்க விரும்புகின்றார்" என்றான். வாஸ்கோ விரைவில் வெளிவந்தார். இருமொழியாளன் ஒருவனை யன்றி வேறெவரையும் வாஸ்கோவுடன் வரவிடவில்லை. வாஸ்கோ புறப்

பட்டபோது தம் தோழர்களை நோக்கி, "எச்சரிக்கையாக நடந்துகொள்ளுங்கள்; என்ன நடந்தாலும் பேச்சாவது செயலாவது ஒன்றும் கூடாது" என்று கட்டளையிட்டார். அதற்குள் வாஸ்கோவின் துணைவர்கள் இருந்த மற்றொரு படகும் வந்தது. அப்படகில் வந்தவர்கள் அன்றிரவு வாஸ்கோவை அடைத்து வைத்திருந்த வீட்டை யடுத்து இருந்த ஒரு குடிசையில் வைக்கப்பட்டார்கள்.

---

13. அழிவின்கண் அல்லல் உழப்பதா நட்பு

காப்பாளர் தலைவன் ஒரு கட்டிலின்மேல் அமர்ந்திருந்தான். வாஸ்கோ அவனிடம் வந்தபோது அவன் அவருக்கு இருக்கையளிக்கவு மில்லை; அவருடன் பேசவு மில்லை; மாறாக அவன் முகஞ் சுளித் திருந்தான். அவன் பேசுவதை வாஸ்கோவுக்குச் சொல்ல இருமொழியாளனை நியூன்ஸ் உடனே அங்குக் கொண்டுவரப்பட்டான். அப்போது காப்பாளர் தலைவன் மரியாதை யின்றி இறுமாப்புடன் வாஸ்கோவைப் பார்த்து, "போர்த்துக்கேசியராகிய நீங்கள் கடலிற் சென்று கப்பல்களைக் கொள்ளையடிக்கின்றீர்க ளென்று மொம்பாஸா மக்களால் எங்களுக்குத் தெரியவருகின்றது. நீங்கள் உண்மையைச் சொல்லுகிற வரையில் உங்கள் கப்பல்களை மடக்கி வைத்துக்கொண்டு உங்க

ளைக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்க வேண்டு மென்பது சாஃமொரின் கட்டளை. இப்போது நீ உண்மையை என்னிடம் சொல்லவேண்டும்; நான் அதை அரசருக்குத் தெரிவிப்பேன்.'' என்று வெருட்டினன். அதற்கு வாஸ்கோ "நீர் என்னை அரசரிடம் அனுப்பினல் அவரிடம் நான் உண் மையை நேரிற் சொல்லுவேன். உம்மிடத்தில் ஒன் றும் பேசமாட்டேன்'' என்று உறுதியுடன் சொன் ஞர். அதைக் கேட்ட காப்பாளர் தலைவன் மிகச் சினந்து "என்னிடம் ஏன் சொல்லக்கூடாது?'' என்று இறைச்சலிட்டான். வாஸ்கோ பேசாமல் நின்ருர்.

காப்பாளர் தலைவன் பற்பல கேள்விகள் கேட் டுக்கொண்டே இருந்தான். வாஸ்கோ ஒன்றுக் கும் வாய் திறந்தாரில்லை. பிறகு அழிசினங் கொண்ட அலுவலாளன் நாயர்களைக் கூப்பிட்டு வாஸ்கோவை வெளியே கொண்டுபோய் ஒரு வீட் டில் தனியாக அடைத்து வைக்கும்படி கட்டளையிட் டான். பிறகு நியூன்ஃஸின் வாயிலிருந்து ஏதாவது பிறப்பிக்கலா மென்று முயன்ருன். ஆனல் நுண் ணறிவுடைய நியூன்ஃஸ் அவன் கேள்விகளுக்கு நேர்விடை கொடுக்காமல் இழுத்து விட்டான். அதைக் கண்ட அலுவலாளன் நியூன்ஃஸையும் அடைத்து வைக்க உத்தரவிட்டான்.

என் செய்வான் காப்பாளர் தலைவன் வாஸ் கோவையாவது அவர் உடனுளரையாவது சின மடையச் செய்ய இயற்றிய முயற்சிக ளெல்லாம் வீணுயின. அதற்காக வன்ரே அவன் அவர்களை

அவ்வளவு பாடும் படுத்தியது. பின்னும் அவர்கட்கு இடர் செய்ய முடியவில்லை. இச்செய்திகள் ஒன்று மறியாத அரசர் காதுக்கு எட்டிவிட்டால் இத்தலைவ னுக்குத் தலை போய்விடு மல்லவா! இன்னது செய்வ தென்றறியாமல் திகைத்தான் காப்பாளர் தலைவன். என்னென்னவோ, எண்ணிப் பார்த்தான் அவன். எதுவும் அவனுக்குச் சரியான வழியாகத் தோன்ற வில்லை. அராபியரிட மிருந்து பறிக்கவேண்டிய பொருளெல்லாம் பறித்துக்கொண்டான். பொரு ளுக் காசைப்பட்டு இப்போது இடுக்கணில் சிக்கிக் கொண்டா னல்லவா! அரசர் கொடுஞ் சினத்துக் காளாகாமல் தான் தப்புவது எவ்வாறு என்பதே அவனுக்குப் பெருங் கவலையாயிற்று. வாஸ்கோ வைத் தன் வசப்படுத்துவதே நல்லது என்று துணிந்தான் தலைவன்.

அவ்வாறே மறுநாள் வாஸ்கோவைத் தன்னி டம் வரவழைத்துத் தலைவன் அவரை நோக்கி, "நீங்கள் உங்கள் கப்பல்களுக்குக் கொண்டுபோன பண்டங்க ளெல்லாம் மறுபடியும் பண்டசாலைக்கு வந்து சேர்ந்துவிட வேண்டும். நாலு நாட்களுக்குள் ளாக, உங்கள் பண்டங்கள் யாவும் உங்கள் கப்பலுக் குத் திரும்பப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும். அதன் பிறகு ஒரு கணமும் இங்கு தங்காமல் உங்கள் கப்பல்கள் ஊரை விட்டுப் போய்விட வேண்டும். இது சாமொரின் கட்டளை" என்றான். அதைக் கேட்ட வாஸ்கோ, "அரசர் கட்டளைப்படி நடக்கத் தடை யொன்று மில்லை; ஆனல் அவ்வாறு செய்யக் கப்பல்களுக்கு முன்னடியே செய்தி யனுப்பவேண்

டும் என்று சொன்னார். மற்றப் போர்த்துக்கேசிய ரும் வாஸ்கோமுன் கொண்டுவரப்பட்டார்கள். அது வரையில் அவர்கள் வாஸ்கோ கொல்லப்பட்டா ரென்றே நினைத்துக்கொண் டிருந்தார்கள். அவர் கள் வந்து வாஸ்கோவைச் சூழ்ந்து மகிழ்ந்தார்கள். எனினும், வாஸ்கோவை அத்துடன் விடவில்லை. தலைவன் அவரை நகருக்குத் திருப்பிக்கொண்டுவந்து துறைமேடையில் பண்டசாலைக்குச் சிறு தொலையி லிருந்த ஓர் அறையில் தங்கியிருக்கும்படி செய்தான். அங்கிருந்தபடியே கப்பலுக்குச் செய்தி யனுப்பக் கட்டளை யிட்டான். அவ்வாறே வாஸ்கோ தமக்கு நேர்ந்தன வெல்லாம் தெரிவித்து "யான் இன்னும் அடைபட்டே கிடக்கின்றேன். பண்டங்களைக் கரைக்கு அனுப்பிவிடவும். பிணையாட்கள் தப்பிப் போகவொட்டாமற் பார்த்துக்கொள்ளவும். யான் விடுதலை பெறுவிட்டால் செயலாளனாகிய **டயாசை**ஃ வரவழைத்துக்கொள். எவரையும், கரைப்பக்கம் அனுப்பாதே—" என்று பாலோவுக்குச் செய்தி யனுப்பினர்.

வாஸ்கோ ரபேல் கப்பலுக்குச் செல்ல முயன் றார்; ஆனால் காப்பாளர் தலைவன் அவரை விட வில்லை. வாஸ்கோ தம் சினத்தையெல்லாம் எவ்வ ளவோ அடக்கிக்கொண்டு மறுபடியும் பாலோவுக்கு "விடுதலை பெறுவே னென்று நான் நினைக்கவில்லை. எவ்வளவு பண்டங்கள் கரைக்குப் போய் விட்டா லும் கவலை யில்லை. நான் விடுதலை பெறமாட்டே னென்று நீ கண்டால், உடனே பிணையாளரைக் கரைக்கு அனுப்பிவிடு. அப்போதும் நான் விடுதலை

பெறுவிட்டால் உடனே போர்த்துக்கலுக்குப் புறப் பட்டுப் போய் அந்நாட்டு அரசருக்கு இங்கு நடந் தன வெல்லாம் தெரிவி. நான் கொல்லப்பட்டாலும் அதுபற்றிக் கவலேயே யில்லே. இந்தியாவுக்கு வழி கண்டோம், என்னும் நற் செய்தி அரசர் காதுக ளுக்கு எட்டிவிட வேண்டும். இஃதே என்னுடைய மனமுவந்த நோக்கம்'' என்று மறுபடியும் சேதி யனுப்பினர்.

இச் செய்தியைக் கேட்டதும் செய்தியாளனே நோக்கிப் பாலோ, "வாஸ்கோவை விட்டு நான் போகமாட்டேன், வாஸ்கோவை விடுவிக்கச் செய் யும் முயற்சியில் என்னுயிர் போனலும் போகட்டும்; என் உடனுளர்களும் உயிரிழந்தாலும் இழக்கட்டும்; எங்கள் மாலுமியின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு நாங்க ளெல்லாரும் உயிர்விடத் துணிந் துள்ளோம். நாங்கள் போரிட்டுத் துறையில் உள்ள கப்பல்களே யெல்லாம் உடைத் தழித்துவிடுவோம் என்பதைக் காப்பாளர்தலேவன் உறுதியா யறியட் டும்'' என்று சொல்லிச் செய்தியாளனே யனுப்பிவிட்டு " இனிமேல் பண்டங்கள் எதையும் கரைக் கனுப்பக் கூடாது'' என்று கட்டளேயும் பிறப்பித்துவிட்டு, "நான் உம்மைக் காக்கவேண்டி இங்கேயே இருப் பேன்'' என்னும் வாய்மொழிச் செய்தியையும் வாஸ்கோவுக்கு அனுப்பி வைத்தான்.

போர்த்துக்கேசியர் மேல் சாஃமொரினுக்குச் சின மூட்டக் காப்பாளர் தலேவனுக்கு அப்போது நல்ல வாய்ப்புக் கிடைத்தது. தானே அரசரிடஞ் சென்று, வாஸ்கோவுக்குச் செய்த தீங்குகளே மறை

துவிட்டு "போர்த்துக்கேசியர் சரக்குகளைக் கணக்கு அனுப்ப மறுத்து விட்டதுமன்றி இந்நகரையும் இத் துறையிலுள்ள கப்பல்களையும் தீக் கிரையாக்கி விடுவோம் என்கிறார்கள்'' என்று கூறினன். அரபி வணிகர்களும் கூடச் சேர்ந்து கோள் மூட்டினர்கள். அரசருக்குச் சினம் மூண்டது. அவர் உடனே "பண்டசாலையிலுள்ள அவர்கள் சரக்குகளை யெல்லாம் கைப்பற்றிக்கொள்ளுங்கள் ; வாஸ்கோவையும் அவருடனுளர்களையும் கொன்றுவிடுங்கள்'' என்று கடுங் கட்டளை பிறப்பித்துவிட்டார்.

நிருபன் கட்டளையை நிறைவேற்றக் காப்பாளர் தலைவன் களிப்புடன் கடுகி நடந்தான். நல்லறிஞராகிய சமயத் தலைவர் அவனை வழி மறித்து நிற்கச் செய்து அரசர் பெருமானை நோக்கி, " அண்ணலே! இது செய்யவொண்ணது. தலைவன் சொல்வதில் உண்மை யிருக்கலாம்; ஆனுலும் போர்த்துக்கேசியர் இங்குக் கரையேறிய நாள்முதல் நமக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை ; அவர்கள் நல்லவர்களாகவும் அமைதியுடையவர்களாகவும் இங்கு இருக்கின்றார்கள். அவர்கள் இத்தகைய தீமைகளைச் செய்தார்கள் என்று ஐயமற ஏற்பட்டாலொழிய இக்கட்டளையை நிறைவேற்றவேண்டாம்'' என்றார்.

இதைக் கேட்ட அரசர் அராபியர்களுடன் கலந்து பேசி நெறித்தலைவர் அறிவூட்டியபடி நடந்துகொள்ள முடிவு செய்தார்.

வாஸ்கோவை மீட்டுக்கொள்ள பாலோவுக்கு ஒரே யொரு வழிதான் புலனயிற்று. அஃதாவது

பிணையாளிகளை நகருக்கு அனுப்பி வைத்துவிட்டு அவர்களைக் கொண்டு அரசரை அணுகி வாஸ்கோவை விடுவிக்குமாறு வேண்டவேண்டுமென்பதே. போர்த்துக்கேசியரால் மிக்க அருமையாகவும் பெருமையுடனும் நடத்தப்பட்ட அப்பிணையாளிகள் தங்களால் கூடிய முயற்சி செய்து 'பாலோவின் விருப்பத்தை ஈடேற்றி வைப்பதாக ஒத்துக்கொண்டார்கள். பிறகு பாலோ அவர்களுக்குப் பட்டுத் துணியும் சிகப்புத் தொப்பியும் கத்தியும் பரிசாக அளித்து அவர்களைப் படகேற்றி அனுப்பி வைத்தான்.

பிணையாளிகள் நகர் சென்றவுடன் நாட்டரசர் பேட்டி கண்டார்கள். அவர்கள் அரசர்முன் முழங்காற்படி யிட்டு வாஸ்கோவைக் கைதியாக்கிய செய்தியையும் காப்பாளர் தலைவன் அவரைத் துன்புறுத்தி இழிவுபடுத்திய விவரத்தையும் விரிவாக எடுத்துச் சொல்லி, "அரசே! தாங்கள் வாஸ்கோட காமாவை விடுவிக்க வேண்டும். உங்களிடத்தில் போர்த்துக்கேசியர் மிகுந்த பற்றுக்கொண்டிருக்கின்றார்கள். தங்களை மிகவும் பெருமையாகவும் உயர்வாகவும் எண்ணுகின்றார்கள். அவர்களைத் தாங்கள் மீட்காவிடில் அவர்கள் எல்லோரும் இந்நகரிலேயே தற்கொலை புரிந்துகொள்வார்கள். இது நேர்ந்துவிட்டால் கள்ளிக்கோட்டையின் பேரும் புகழும் அழிந்துபோய்விடும். நமக்கிருக்கும் மேன்மைக்கும் சிறப்புக்கும் அழிக்க முடியாத களங்கம் உண்டாகிவிடும். துரையவர்களே! தாங்கள் இவ்விளைவுகளை யெல்லாம் சீர்தூக்கிப் பார்க்க

வேண்டும். தங்களுக்காவது இந்நகருக்காவது அவர்களால் யாதொரு தீங்கும் நேரிடாதென்பது திண்ணம், திண்ணம்'' என்று அரசர் மனமுருக வற்புறுத்தி வேண்டினர்கள்.

அதைக் கேட்ட அரசர் மனந் தடுமாறியது. காப்பாளர் தலைவனிடம் கடுஞ்சினங் கொண்டார். அவன் செய்த பழிச்செயல்களுக் கெல்லாம் கழுவாய் தேடவேண்டுமென்று அவர் மனம் துடித்தது.

இந்நிகழ்ச்சி வாஸ்கோவுக்குத் தெரியாது; மறுகணத்தில் என்ன நேருமோவென்று வருந்திக் கொண் டிருந்தார் அவர். அந்நேரத்தில் அரசர் அழைப்பதாக அவருக்குச் சேதி வந்தது. உடனே வாஸ்கோ புறப்பட்டு அரண்மனை வந்தார். அரசர் அவரைப் பார்த்து, "உங்களுக்கு நேர்ந்த இடுக்கண்களை யெல்லாம் யான் அறிந்தேன். அவற்றிற்காக நான் தங்களை மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன். குற்றவாளிகளைத் தக்கபடி தண்டிப்பேன். நீங்கள் விரைவில் உங்கள் கப்பலுக்குப் போய்ச் சேருங்கள்'' என்று சொல்லி அவருக்கு மாணிக்கங்களும் முத்துக்களும் பதித்த பதக்க மொன்றைப் பரிசாக அளித்துத் தன் பரிவையும் நல்லெண்ணத்தையும் தெரிவித்துக்கொண்டார். அரசர் சொன்னவாறே வாஸ்கோ கப்பலுக்குத் திரும்பினர். போர்த்துக்கேசிய நண்பர்களோடும் நாயர்களின் கூட்டத்தோடும் துறைமுகம் சென்று படகேறினர். படகு புறப்படும்போது மான்சேடி உள்ளே குதித்தான். அவன் தன்னுடன் கப்பலுக்கு வந்ததுபற்றி வாஸ்கோவுக்கு மகிழ்ச்சியே.

வாஸ்கோ ரபேல் கப்பலுக்கு வந்தபோது பாலோ ஓடிவந்து அண்ணனைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். அவனுக்குப் போன உயிர் வந்தது போல இருந்தது. கப்பற்காரர்கள் எல்லோரும் தங்கள் தலைவரைக் கண்ணுற் கண்டதும் ஆனந்தக் கண்ணீர் சிந்தினர். அன்றிரவு கப்பல்களில் விருந்தும் விளையாட்டுமாக இருந்தது.

மறுநாட் காலை நல்ல காற்று அடித்தது. கள்ளிக்கோட்டையையும் அதில் உள்ள தெருக்கள் துறைகள் சிறு கோபுரங்கள் முதலியவற்றையும் இறுதியாகக் கண்ணாரப் பார்த்துவிட்டுப் போர்த்துக்கேசியர் அத்துறை நீங்கி அகன்ற கடற்பரப்பில் கப்பல்களை யோட்டிக்கொண்டு தாய்நாட்டுக்குப் புறப்பட்டார்கள்.

---

14. தாய்நாடு திரும்புதல்

நவம்பர்த் திங்கள் முடிவில் கேப்ரியல் கப்பல் கள்ளிக்கோட்டைத் துறைமுகம் விட்டு மெள்ள நகர்ந்தது. வாஸ்கோ போர்த்துகல் விட்டுப் புறப்பட்டு அப்போது பத்தொன்பது திங்களாயின. திரும்பிச் செல்கையில் கப்பல்கள் கண்ணனூர்கரை சேர அங்கேயே திவானி மூரன் தங்கிவிட்டான். பிறகு கள்ளிக்கோட்டைக்கு வடக்கேயுள்ள கோவாக்கரை வந்துசேர்ந்தனர். அங்கே கோவா மக்களிற் சிலர் இவர்களுடைய கப்பலைத் தாக்க,

இவர்கள் அவர்களுடன் போரிட்டு அவர்களைத் துரத்திவிட்டனர்.

நான்கு கிழமைகளில் இந்தியப் பெருங்கடல் கடந்தனர். பிறகு ஆப்பிரிக்கக்கரை கண்டு பெருங் களிப் படைந்தனர். 1499 ஜனவரியில் வாஸ்கோ **மெலிண்டா கரை** கண்டு அங்குக் கப்பல்களை நிறுத்தினர். நண்பரான அவ்வரசர் வாஸ்கோவைத் திரும்ப வரவேற்றார்.

மெலிண்டாவில் பன்னிரண்டு நாள் தங்கினர். அங்குக் குடி நீரும் உணவுப்பொருள்களும் தேடிக் கொண்டு மேற்சென்றனர். வழியிலுள்ள **சான்ஃசிபார் நாடும் சான்பிளாஸ்** நகரும் கடந்தனர். சில நாட்களில் நன்னம்பிக்கை முனையையும் சுற்றிப்போனார்கள். இறுதியில் ஆகஸ்டுத் திங்களில் வெர்டிமுனைத் தீவுகளுக்கு வந்தார்கள்.

நன்னம்பிக்கை முனை கடந்ததும் பாலோ நோயடைந்தான். வெர்டி முனைத் தீவுகள் வந்து சேர்வதற்குள் பாலோ தீரா நோயடைந்தான். அவனைக் கரைக் கெடுத்துக்கொண்டுபோன மறு நாளே காலன்வாய்ப்பட்டான். தம்பியை இழந்த அண்ணன் துயர் அளவிலடங்கா. தம்முடன் பெருந் துயர் கொண்ட போர்த்துக்கேசியரும் வாஸ்கோவும் பாலோவைக் கொண்டுபோய்க் கல்லறையில் அடக்கஞ் செய்துவிட்டனர். வெர்டிமுனைத் தீவுகளை விட்டுப் புறப்பட்டபோது வாஸ்கோ அடைந்த வருத்தத்துக்கு ஓர் அளவுமுண்டோ! உடன்பிறப்பில்லா உடம்பு பாழல்லவா. பின்னுஞ் சில நாட்களில்

போர்த்துகல் அரசர் வாஸ்கோவை மிக மகிழ்வுடன் வரவேற்பாரல்லவா! ஊரார் பெருங்களிப்பை உரைக்கவும் முடியுமோ! அரசர் எவ்வளவு கொண்டாடுவார்! எவ்வளவு வரிசைகள் அளிப்பார். உடன் பிறந்தாரும் உயிர் நண்பரும், உடனுழந்தவருமாகிய தம்பியார் அவைகளை உடன் துய்ப்பதற் கில்லையே யென்று வாஸ்கோ மனம் பதைத்தார்.

வாஸ்கோட காமா வெற்றியுடன் திரும்பி வரும் செய்தி இரண்டொரு நாட்களுக்கு முன்னமேயே லிஸ்பன் நகருக்கு எட்டியது. பாலோட காமா இழப்பும், அதனல் வாஸ்கோட காமா அடைந்த வருத்தமும் அரசர் கேட்டுப் பெருந்துய ரடைந்தார். அருங்கட லோடி அறியாத நாடறிந்து இந்தியாவுக்குக் கடல்வழி யமைத்த வெற்றியாளரின் வீரத்துக்கும் செயற்கரிய செய்ததற்கும் தக்கபடி பரிசி லளிக்கவும் பெருமைப் படுத்தவும் வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் அரசர் முன்னரே செய்துவைத்தார்.

கப்புல்கள் லிஸ்பன் எல்லையை அடைந்த செய்தி மிக விரைவில் நகரெங்கும் பரவியது. மக்கள் கூட்டம் கூட்டமாகக் கரைக்கு விரைந்து சென்றனர். துறையில் நின்ற கப்பல்களில் எண்ணற்ற வெற்றிக் கொடிகள் வானமளாவிப் பறந்து கொண் டிருந்தன. கப்பலோட்டிகள் சிறப்பாக உடுத்திக்கொண்டு கப்பல் மேற்றட்டுகளில் வந்து கூடி ஆரவாரஞ் செய்தனர். அவ்வூர் முழுதும் பெருவிழாவாகத் தோன்றிற்று.

துறைமேடையில் ஒரு பெருமாளிகை யுண்டு. அங்குத் தப் பரிவாரங்களோடு அரசர் வந்து சேர்ந்

தார். அங்கே அரச குடும்பத்தாருக் கென சிறப்பான இருக்கைகள் அமைத்திருந்தனர் அரசர் இருக்கையில் அமர்ந்தவுடன் தொலையில் குண்டுகள் வெடித்தன. அவற்றிற் கேற்ப கலங்களி லிருந்தும் வெடிகள் மறுஒலி செய்தன. பிறகு காமாவின் கப்பல்கள் துறைமுகத்தின் நடுவில் வந்து நின்றன. அக்கப்பல்களின் பாய்மர நுனிகளில் போர்த்துகல் நாட்டுக் கொடிகள் நிறைந்து பறந்தன.

நாவிகர் உடை யணிந்து இருகைகளையும் மகிழ்வுடன் வீசிக்கொண்டு ராபேல் கப்பலில் வாஸ்கோ நின்றார். கீழ்த்தட்டில் கப்பலாட்கள் கரையை ஆவலுடன் நோக்கியவாறு நின்றுகொண் டிருந்தார்கள். அவர்களுடன் மெலிண்டா நாட்டுக் கப்பலோட்டிகளும் நின்றுகொண் டிருந்தார்கள். கப்பலில் இருந்தவர்கள் எல்லோரும் தாய்நாட்டின் தரை கண்டு களிப்புடன் முகமலர்ந்து நின்றார்கள்.

உள்ளமும் உடலும் ஒருங்கே இன்பத்தால் திளைக்கும் காட்சி யன்றோ அஃது! கடலோடிக்களைத்துக் காலோய்ந்த கப்பலோட்டிகள் தம் தாய்நாட்டைக் கண்டபோது களி மிகுந்து ஆரவாரித்தனர். நெடுநாள் காணாம லிருந்த உற்றார் உறவினர்களைத் திரும்பக் காண அவர்கள் பெரிதும் ஆவல் கொண்டு நின்றனர். இத்தகைய களிநிகழ்ச்சிகளினிடையே பாலோவின் மறைவு கேட்டுப் பலரும் மனமழிவார்களன்றோ.

அரசரிடம் வாஸ்கோ சென்றபோது அவர் தாடி நீண்டிருந்ததையும் அவர் முகம் வாட்டமுற்று

வருந்துவதையும் மக்கள் கண்டனர். வாஸ்கோ தங்கள் நடுவே சென்றபோது அவர்கள் தங்களை யறியாமலேயே கைகொட்டிக் களிக்கூச்சலிட்டனர். ஒவ்வொருவரும் அவரை வாயார வாழ்த்தி வரவேற்றனர்.

வாஸ்கோ இமானுவேல் அரசரிடம் சென்றதும் அரசர் தம் இருக்கை விட்டு எழுந்து அவருடன் கை குலுக்கி அவரை வரவேற்ருர். வாஸ்கோ முழங் காற்படி யிட்டுக் காவலர் கைக்கு முத்தமிட்டார். இமானுவேல் அரசர் உடனே வாஸ்கோவை எழுப்பி அவரை ஆவலோடு அணைத்துக்கொண்டார். அப்போது வாஸ்கோ, அரசர் எதிர் நின்று, "ஆண்டவனே, என்னுடைய இடுக்கணெல்லாம் இப்போது இன்பமாய் முடிந்தது. ஏனெனில் இவ்வளவு நாட்கள் கழித்துத் தங்களை மறுபடியும் பார்க்கும் பெரும் பேறுபெற்றேனல்லவா! இதற்காகவே யான் இறைவனைப் போற்றிக்கொண் டிருந்தேன்" என்ருர். அதனைக் கேட்ட இமானுவேல் அரசர், "உம்முடைய வரவு நல்வரவாகுக! பெரும் வாய்ப்புடையதாகுக! இதனுல் யான் பெருமை பெற்றேன்! மகிழ்வு முற்றேன். கடவுள் உம்மை நலமுடன் கொண்டுவந்து நாடு சேர்த்தார்; உமது வீரச் செயல்களுக்குத் தக்க பரிசுகளை நீர் நேரிற் பெறவேண்டுமன்ருே! உம் அருமைத் தம்பியார் மறைவுக்காக யானும் மிக வருந்துகின்றேன்" என்று பரிவு கூறினுர்.

பிறகு அரசர் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார். அவருடன் தமக்கென் றிருந்த குதிரையின்

மேல் வாஸ்கோ ஏறிக்கொண்டார். அவைக்களத்தார் பளபளப்பான உடையுடுப்புக்களுடன் பின்னல் செல்ல யாவரும் அரண்மனை அடைந்தனர். அரசர் வாஸ்கோவைத் தம் அரசியாரிடம் அழைத்துப்போனர். வாஸ்கோ அரசியாரை வணங்க அவரும் வாஸ்கோவைக் கனிவுடன் வரவேற்றார்.

மாலுமிகளின் நண்பர்கள் யாவரும் கூட்டங் கூட்டமாக வந்து அவர்களைச் சூழ்ந்து கைகோத்துக் கட்டிக்கொண்டு வெற்றி முழக்கத்தோடு தெருக்களில் திரியலாயினர். தத்தம் இல்லத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீரராகக் கொண்டாடப் பட்டார்கள். அவர்கள் செயற்கரிய செய்தவர்கள் அல்லரோ !

வாஸ்கோட காமா நம் இந்திய நாட்டைக் காண லிஸ்பன் நகரி லிருந்து 1497-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25-ஆம் நாள் புறப்பட்டுக் கடலில் வந்தார். காணுதன வெல்லாங் கண்டு, கள்ளிக் கோட்டைக்கு வந்தார். அங்கும் கள்ள மனத்தினர் படாதபாடெல்லாம் படுத்த அவர்களிட மிருந்து பொறுமையோடு தப்பி, அவ்வரசர் அருளும் அந் நாட்டுப் பொருளும் பெற்று வந்த வழியே திரும்பி 1499-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 18-ஆம் நாள் அஃதாவது ஈராண்டும் இருபத்துமூன்று தினங் களும் கழித்துத் தாய்நாட்டுக்கு மீண்டும் வந்தார்.

மேற்றிசை நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையே ஒரு கடல்வழி கண்ட பெருமை வாஸ் கோட காமாவுக்கு உரியதாகும். மேற்றிசையையும்

கீழ்த்திசையையும் வாணிப நிமித்தம் இணைத்த வாஸ்கோவை உலகினர் எல்லோரும் ஏற்றிப் புகழ்ந் தார்கள். செயற்கரிய செய்து முடித்த வாஸ்கோ வைப் புகழ்ந்து போர்த்துகல் நாட்டுக் கவிஞர்கள் பற்பல கவிகள் இயற்றினர்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

The T.V.C. Press, Madras. Q.H.MS. 95 B

Publication No. 409

VASCO-DA-GAMA

BY

S. S. DEVAR

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY. TINNEVELLY. LTD.,
TIRUNELVELI & MADRAS.

Price As 12